Sales Reps. Welcome

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)

• INDEPENDENTLY OWNED AND OPERATED

For All your Real Estate & Investments Needs!

HomeLife GTA Realty Inc. Brokerage *

1711 McCowan Rd. #206, Toronto

145 Traders Blvd # 28, Mississauga

416.321.6969 / 905.712.2666



17 வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca

Web: www.vlambaram.com

416-282-4978



வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்



நதி 17 | பாலம் 12 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 15, 2007




வாரிசு அரசியல் 05



தந்தையர் தினம் ஜுன் 17, 07

6ஆவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா செப்ரெம்பர் 16, 2007 படைப்புக்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் ஆவணி 15, 2007

416-857-6406 / 416-450-6833

# ஜெனீவாவில் "வெல்க தமிழ்" எழுச்சிப் பேரணி

"தமிழீழ அரசை அனைத்துலகமே அங்கீகரி" என்ற முழக்கத்தை முன்வைத்து ஐக்கிய நாடுகள் சபை முன்பாக நடந்த உலகத் தமிழர்களின் "வெல்க தமிழ்" எழுச்சிப் பேரணியால் சுவிசின் ஜெனீவா நகரமே திணறியது.

சிறிலங்கா ஆட்சியாளர்களால் நடத்தப்படும் தமிழின அழிப்பை நிறுத்துக, போர்க்குற்றம் புரியும் சிறிலங்காவை அனைத்துலகக் குற்றக் கூண்டில் நிறுத்துக, தமிழர் தாயகத்திலிருந்து சிறிலங்கா ஆக்கிரமிப்புப்படையே வெளியேறு, தமிழீழ மக்களின் ஏகபிரதி நிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குக, தமிழர் விடுதலைக்கான குரலை அங்கீகரி, தமிழீழத் தமிழர்களின் நடைமுறை அரசை அனைத்துலகமே அங்கீகரி என்று பல்வேறு முழக்கங்கள் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டு இருந்தன. இலண்டன், பிரான்ஸ், ஜேர்மனி என்று ஐரோப்பிய நாடுகளில் இருந்து எல்லாம் இந்த எழுச்சிப் பேரணிக்கென பெண்கள், குழந்தைகள் உட்பட பல்லாயிரக் கணக்கானோர் திரண்டுவந்திருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக கனடா ரொரன்ரோவில் கனடியத் தமிழ் மக்களது உணர்வுகளின் வெளிப்பாடாக "வெல்க தமிழ்" நடைபெற்றது. ஸ்காபரோவின் அல்பேர்ட் காம்பெல் சதுக்கத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் ஆலய மணியோசையுடன் நிகழ்வு தொடங்கியது. திருமதி செல்வநாயகம் கனகாம்பிகை (மாவீரர் மேஜர் நித்திலாவின் தாயார்) ஈகைச்சுடர் ஏற்றினார்.

ஆயிரத்துக்கும் மேலான தமிழர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் லிபரல், கொன்சவேட்டி மற்றும் என்டிபி கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை கண்டித்தனர்.

இதே சமயம் சிறீலங்காவின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஸ ஐநா தொடர்பாக தெரிவித்த கருத்துகளுக்கு புதன்கிழமை ஐக்கிய நாடுகள் சபை கடும் விசனம் தெரிவித்து கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.

சில தினங்களுக்கு முன்பு கோத்தபாய, ஐநாவினுள் விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளதாகவும் புலிகள் ஐநா வை பிழையாக வழிநடத்துவதாகவும் தெரிவித்திருந்தார். அவரது கருத்தை பி.பி.சி மற்றும் ரொய்ட்ரஸ் ஊடகங்கள் வெளியிட்டிருந்தன. இக்குற்றச்சாட்டு ஆதாரம் எதுவுமற்றது. அண்மைக்காலமாக உதவிநிறுவன பணியாளர்கள் மீதான கொடுமைகள், கொலைகள் அதிகரித்துள்ள நிலையில் பாதுகாப்பு செயலரின் இக்கூற்று எமது உதவிப்பணியாளர்களின் செயற்பாடுகளையும் உயிர்களையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது எனத்தெரிவித்துள்ள சிறீலங்காவிற்கான ஐநாவின் மனிதாபிமான பணிகளுக்கான வதிவிடப்பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

ஐநா பணியாளர்கள் ஐநாவின் கடுமையான சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே பணிக்கமர்த்தப்படுவதாகவும் அவர்கள் ஐநா வரைமுறைகளுக்கும், செயலருக்கும் பதில்கூற கடமைப்பட்டவர்கள்




என்று தெரிவித்துள்ளார். அவர்களின் பணிகள் நடுநிலையான உயர்விழுமியங்களை கொண்டன, அவர்கள் மூன்றாம் தரப்பு யாரினதும் கட்டளைகளுக்கு இணங்குபவர்கள் அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை தீவில் பணியாற்றும் ஐநாவின் பணியாளர்கள் ஓய்வின்றி பாதிக்கப்பட்ட சமூகங்களுக்காக உதவுவதை தாம் கண்ணுற்றதாகவும் அவர்கள் சிறந்த கூட்டுப்பொறுப்புடன் இயங்குவதனால் ஐநாவின் உயர்ந்த இலக்குகளுக்காக தொடர்ந்தும் பணியாற்றுவர் என்றும் தெரிவித்த ஐநா அதிகாரி ஐநாவின் பணியாளர்களிடையே நல்லிணக்கம், கூட்டுப்பொறுப்பு விடயத்தில் கேள்விக்கே இடமில்லை என்றார்.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்



தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Real Education

உண்மையான கல்வி



அறிவுத்திறன் + பண்பு

Classes for 9 to 17 years old

Focus, Memory, Reading Skill, Listening Skill, Presentation Skill, Goal Setting, Self-Confidence, Self-Discipline - Patience - Obedience, Positive thinking, Team Work, Winning Attitude, Leadership...

Tel.: 416-725-5112

KG Master www.kgmaster.com

Education = Intelligence + Character

Sai Mortgage Center

- 0% Down Payment
- 1st, 2nd & 3rd Mortgages
- Self - Employed Programs
- Investment Properties

*Need Mortgage Agents*

Call 416-745-2378

Email- singcom2009@yahoo.ca

துரித பணமாற்றுச் சேவை

- 49 வருடங்கள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 16 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221

அடமானக்

என் பணி கடன் செய்து கொடுப்பதே!



Das Narayanasamy AMP

Mortgage Specialist

Cell: 416-543-6614

Business: 416-759-1818, Fax: 416-299-0789

E-mail: das.narayanasamy@centumveedu.com

www.centumveedu.com

CENTUM™ Veedu Mortgages Inc.

Buy & Sell Residential and Commercial



Raj A. Rasaratnam B.Com.

Sales Representative

416-726-8055

வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க

HomeLife/ GTA Realty Inc.

Real Estate Brokerage*

1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON M1B 3Y3

வாழ்வு-வியாபாரம்-முதலீடு



HomeLife GTA Realty Inc., Brokerage

Shiva Sharmah

Sales Representative

416-666-5515

Bus: 416-321-6969

1711 McCowan Rd. Suite #206, Toronto

• INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...

ரவி பரமு

வீட்டுப் பிரதிநிதி



DIRECT: 416.262.4176

OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd.

Suite #206, Toronto

• INDEPENDENTLY OWNED AND OPERATED

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

மே பதினைந்திலிருந்து ஜுன் பத்துக்குள் மூன்றுமுறை வங்கிகள் வீட்டுக்கடனுக்கான நிலையான (Fixed) வட்டியை மூன்றுமுறை கூட்டியுள்ளன. ஏறத்தாழ 0.65 சதவீதம் வட்டி இந்த காலகட்டத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது. வங்கிகளின் முதல் தர வாடிக்கையாளர்களுக்கு கடன் கொடுக்கும் வட்டி வீதத்தை முதன்மை அல்லது பிரைம் வட்டி என்பார்கள். இந்தப் பிரைம் வட்டி இந்த ஒருமாத கால கட்டத்தில் மாறவில்லை. இந்தப் பிரைம் வட்டி Bank of Canada எப்போதெல்லாம் வட்டி வீதத்தை மாற்றுகின்றதோ அப்போதெல்லாம் மாறும். ஆக கடந்த ஒருமாத காலத்தில் Bank of Canada வட்டி வீதத்தை மாற்றவில்லை என்றாலும், விரைவில் மாற்றும் என்று நம்பப்படுகின்றது.

இந்த ஆண்டு இறுதிக்குள் Bank of Canada வட்டி வீதத்தை 0.50 சதவீதம் அதிகரிக்கும் என்று பரவலாக நம்பப்படுகின்றது. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே நிலையான வட்டி வீதத்தை வங்கிகள் முன்னதாகவே கூட்டி விட்டன. Bond என்று சொல்லப்படும் கடன் பத்திரங்களின் வட்டி வீதங்கள் ஏற்கனவே அதிகரித்துள்ளன. இதனால் வங்கிகளும் நிரந்தர வைப்பாக GIC யில் பணம் போடுபவர்களுக்கான வட்டி வீதத்தையும் அதிகரித்துள்ளன. எந்தவித ரிஸ்க்கும் எடுக்காமல் பணத்தைச் சேமிக்க விரும்புபவர்களுக்கு இது நல்ல செய்தி.

மேல் எழுந்த வாரியாகப் பார்த்தால், ஏன் இவர்களுக்கு எல்லாம் வேலையே கிடையாதா? வட்டி வீதத்தைச் சற்றே கூட்டுவதும், குறைப்பதும் தான் வேலையா என்று கேட்கத் தோன்றும். இந்தக் கூடுதல், குறைத்தல் எல்லாம் பல காரணங்களை அல்லது காரணிகளை அடிப்படையாகக் கொண்டே செய்யப்படுகின்றது.

இப்போதைய வெளிப்படையான காரணம் பொருளாதாரத்தில் கூடி வரும் விலைவாசி ஏற்றம். இந்த விலைவாசி ஏற்றத்தைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டிய கடமை Bank of Canada உள்ளது. அதன் அடிப்படையிலேயே வட்டி வீதங்கள் கூடுதலும், குறைதலும் தற்சமயம் ஆராயப்படுகின்றது.

கூடும் வட்டி பங்குச் சந்தைக்கும் நல்ல செய்தி அல்ல. கடந்த இருவாரங்களில் உலகின் பல பங்குச் சந்தைகளில் விலைகள் சரிந்தன. ரொறொன்ரோவும் இந்த விதிக்குள் அடங்கியது. வட்டி வீதங்கள் கூடும் போது நிறுவனங்களின் இலாபம் குறையும். இலாபம் குறைந்தால் பங்குகளின் மதிப்பும் குறையும். சந்தை நாளை நடக்கப்போவதை இன்றே கணக்கில் எடுத்துக்கொள்கின்றது. அதனாலேயே பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகள் குறைகின்றன. குறிப்பாக கனடாவில் உலோகம் மற்றும் எண்ணைப் பொருட்களின் விலைகள் குறைவதை ஒட்டி, அப்பங்குகளின் விலைகளும் குறைந்தன. இந்த வீழ்ச்சிக்குப் பிறகும், இந்த ஆண்டில் பங்குச் சந்தையின் இன்டெக்ஸ் (Index) ஆயிரம் புள்ளிகள் அதிகம் இருப்பதை மறந்து விடக்கூடாது.

இந்தச் சந்தை நிலவரங்கள் எல்லாம் என்னை எப்படிப் பாதிக்கின்றது. இதுதான் நமது கவலை. இல்லையா?

அதற்குப் பதில் சொல்லுமுன் கனடிய நாணயத்தின் மதிப்பையும் பார்ப்போம். தொடர்ந்து கனடிய நாணயத்தின் மதிப்பு அமெரிக்க டொலருக்கு எதிராக உயர்ந்து வருகின்றது. இந்த நாணய உயர்வு நல்லதா? கெட்டதா? ஸ்பெகுலேட்டர்களுக்கு குறைந்த காலத்தில் இலாபம் சம்பாதிக்கவோ நட்டம் அடையவோ இது சிறந்த வாய்ப்பை தருகின்றது. மற்றப்படி இந்த நாணய உயர்வால் சிலர் சிரிப்பர். சிலர் அழுவர். கனடாவில் பொருட்களை உற்பத்தி செய்து, அமெரிக்க டொலரில் விற்பவர்கள் அழும் வகையில் இருக்கிறார்கள். ஒவ்வொரு சத (cent) உயர்வும், Canfor Corp. என்ற நிறுவனத்துக்கு 19 மில்லியன் டொலர் நட்டத்தைத் தருகின்றதாம். இதேபோல் பாதிக்கப்பட்டுள்ள வேறு சில நிறுவனங்கள் West Fraser Dimper நிறுவனம், கட்டிலிஸ்ட் பேப்பர் கோர்ப்பரேஷன், டெம்பெக் இன்கார்ப்ரேட்டட் முதலியன. நீங்கள் கனடிய டொலரைக்கொண்டு இப்போது அமெரிக்காவுக்குச் சென்றால் முன்னை விட அதிகமாகப் பயன்பெறலாம். கனடாவிலிருந்து அமெரிக்கா செல்பவர்கள் சிரித்தால் அமெரிக்காவிலிருந்து கனடா வருபவர்கள் அமெரிக்க டொலரை, கனடிய டொலராக மாற்றும் போது அழுகிறார்கள்.

**பெரி. முத்துராமன்**

வீட்டுக்கடனை மாறும் வட்டியில் வைத்திருப்பவர்கள் நிலையான வட்டிக்கு மாற வேண்டுமா? வீட்டுக்கடனைப் புதுப்பிப்பவர்கள் இன்றைய சூழ்நிலையில் எத்தகைய வட்டியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? அமெரிக்கப் பொருளாதாரமும், அமெரிக்க வீட்டு விற்பனையும் மந்தமாகக் காணப்படுகின்றது. அமெரிக்கப்பொருளாதாரம் மந்தப்பட்டால், கனடிய ஏற்றுமதி பாதிக்கப்படும். கனடிய ஏற்றுமதி பாதித்தால், விலைவாசி ஏற்றம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். அத்தகைய ஒரு நிலைவருமானால் கனடாவில் வட்டி வீதத்தை அந்தச் சூழ்நிலையில் குறைக்க நேரிடும்.

மேலும் அமெரிக்காவில் வட்டி வீதங்களைக் குறைப்பதற்கான வாய்ப்பு தென்படுகின்றது. அப்படி அமெரிக்கா வட்டி வீதத்தைக் குறைத்தால், கனடிய நாணயத்தின் மதிப்பு மேலும் உயரும். கனடிய பொருட்கள் உலகச் சந்தையில் விற்பது சிரமம் ஆகலாம். பலபேருக்கு குறிப்பாக தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு வேலை போகலாம். சென்றமாதம் எதிர்பார்த்ததை விட குறைந்த அளவு வேலைகளே உருவாக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலை தொடர்ந்தால் வட்டி வீதத்தை ஏற்றுவது என்பது இயலாது.

இன்றைக்கு இருக்கும் ஒரு நிச்சமற்ற சூழ்நிலையில் கடன் அட்டை (Credit Card) மற்றும் பல கடன்களையும் வீட்டுக்கடனுடன் ஒன்றாக்கி ஒரே தவணைப்பணமாக மாற்றிக்கொள்ளுதல் புத்திசாலித்தனம்.

வட்டியைப் பொறுத்த வரையில் குறுகிய காலத்தில் ஆறுமாதங்களிலிருந்து ஓராண்டுக்குள் வட்டி வீதங்கள் தொடர்ந்து உயரும். அதற்குப் பிறகு வரக்கூடிய சூழ்நிலையைக் கணித்தல் சிரமமானது.

எது எப்படி இருந்தாலும், நிம்மதியை விரும்புபவராயிருந்தால் நிலையான வட்டியை தேர்ந்தெடுங்கள். சந்தை மாற்றங்களால் இலாபத்திற்கும் தயார் நட்டத்திற்கும் தயார் என்றால் மாறும் வட்டியைத் தேர்ந்தெடுங்கள். இல்லை இரண்டுக்கும் ஆசை என்றால் உங்கள் வீட்டுக்கடனில் பாதியை நிலையான வட்டியிலும், மீதியை மாறும் வட்டியிலும் வைத்துக்கொள்ளுங்கள்.

உங்களைக் குழப்பாமல் தெளிவாக விடை கொடுத்து விட்டேன். இல்லையா?

உங்கள் நிதியம் பற்றி இக்கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ள ஸ்கொசியா வங்கி தொலைபேசி எண் - 416.439.3040 Ext. 2008



# கிராமங்கள் பற்றிய வரலாறுகளின் முக்கியத்தும்

கிராமங்கள் பற்றிய வரலாறுகள் படைப்போமாயின் அவையாவும் ஒன்று சேர்ந்து ஒரு தேசத்தின் வரலாறாக மாறும் என்பதில் ஐயமில்லை.

எமது முன்னோர்கள் தமிழீழத்தில் உள்ள கிராமங்கள் பற்றிய மற்றும் இன்னோரன்ன வரலாறுகளை எழுத்து மூலம் படைக்காததன் விளைவே இன்று வேற்றினத்தவர்களால் எமது வரலாறு திரிக்கப்பட்டு வருகின்றது. அது மட்டுமன்றி எமது மண்ணை ஆக்கிரமித்துத் தம்வசப்படுத்தி எம் வரலாற்றை அழிக்கும் பணியை தொடர்கின்றார்கள்.

அதனால் எம் கிராமங்கள் பற்றிய வரலாற்றினை இப்பொழுதிருந்தே எழுதி வைப்போமாயின் வருங்காலச் சந்ததியினரும் எம் வரலாற்றினை அறிந்துகொள்ள வாய்ப்புக்கிட்டும்.

கடந்த 27. 05. 2007 ஞாயிற்றுக்கிழமை மாலை கனடா கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் இளைப்பாறிய தலைமைத் தபால் அதிபர் சரவணமுத்து தில்லைநாதன் அவர்கள் தலைமையில் "வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்" என்னும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் பெருந்திரளானோர் கூடியிருந்தனர். மேற்படி நூலின் பதிப்பாசிரியர் ச. மாணிக்கவாசகரும் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நூல் வெளியீட்டுச் சபையினரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு இந்நூலைப் படைத்துள்ளனர். இருந்தும் இந்நூல் முழுமையான தகவல் உள்ளடக்காது விட்டாலும் அடுத்துவரும் திருத்தப் பதிப்புகளில் மேலதிக தகவல்கள் உள்ளடக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக தகவல்களையும், அவற்றிற்கான நிழல்படங்களையும், அகழ்வாராய்ச்சி சம்பந்தமான விபரங்களையும், மற்றும் இன்னோரன்ன தகவல்களையும் கொடுத்துதவுவீர்களாயின் வேலணை பற்றிய வரலாறு முழுமைபெற உதவுமென்பதில் ஐயமில்லை. மேற்படி தகவல்களையும், விபரங்களை கொடுக்க விரும்புகின்றவர்கள் இந்நூலின் பதிப்பாசிரியருடன் தொடர்பு கொள்ளலாம்.

இதனைவிட வேறு சில கிராமங்களும் தமது ஊர்கள் பற்றிய வரலாற்று நூல்களைப் படைத்திருந்த போதிலும் அவை முழுமை பெறாவிட்டாலும் பல தகவல்களைத் தந்துள்ளன.

இவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஏனைய கிராமங்களின் அறிஞர்களும், மக்களும் சேர்ந்து தத்தமது கிராமத்தின் வரலாற்றைப் படைப்பார்களாயின் எமது தேசத்தின் வரலாறு தானாகவே உருவாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

இவ்வரலாறுகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிதாகவும் அமைதல் வேண்டும்:

1. கிராமத்தின் பெயர் வந்ததற்கான காரணம்
2. கிராமத்தின் பரப்பளவு மற்றும் எல்லைகள்
3. நீர்வளம், நிலவளம், மக்கட்தொகை
4. விவசாயம், தொழில்கள்
5. ஆலயங்கள்
6. பாடசாலைகள்
7. அரசாங்கக் காரியாலயங்கள், கூட்டுத்தாபனங்கள்
8. வைத்திய சேவை மற்றும் ஆயுர்வேத வைத்தியம்
9. புலவர்கள், கல்விமான்கள்
10. மருத்துவர்கள்
11. கலைஞர்கள்
12. தொழிலதிபர்கள், வியாபாரிகள்
13. பலநோக்கு கூட்டுறவு சங்கங்களும் அவற்றின் செயற்பாடுகளும்
14. நீரேரி, குளங்கள், கடல் சம்பந்தமான விபரம்
15. சமூக சேவையாளர்கள்
16. வேறு விடயங்கள் இருப்பின்

இவ்விபரங்களை அரசியலுக்கு அப்பால் நின்று நடுநிலையுடன் எழுதுவதே சாலச் சிறந்தது. எழுதிய நூல்கள் நூல் நிலையங்களிலும், பல்கலைக் கழகங்களிலும், வாசகர்களின் பாவனைக்காக வைக்கப்படுமாயின் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதுபவர்களுக்கும், வரலாறு பற்றி அறிய முற்படுபவர்களுக்கும் பேருதவியாக அமையும்.

அத்துடன் உலகெலாம் பரந்துள்ள ஊர்ச் சங்கங்களும். பாடசாலைச் சங்கங்களும் தங்களால் வெளியிடப்படும் ஆண்டு மலர்களிலும், விசேட மலர்களிலும் ஊர் பற்றிய கட்டுரைகளை எழுதுவது
மிகமிக முக்கினமானதாகும்.

புலம்பெயர்ந்த பாடசாலைச் சிறார்களும் ஏனையோரும் எம்நாட்டு வரலாறு, மக்கள் சம்பந்தப்பட்ட வரலாறு, இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட வரலாறு, சம்பந்தப்பட்ட நூல்கள் பெறுவதில் பெரும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர்.

எனவே இவர்களின் தேவை கருதியாவது கிராமங்கள் பற்றிய வரலாறுகளைப் படைப்பது சாலச் சிறந்தது.

எதிர்வரும் காலங்களில் இப்பணி சிறப்புற அமையுமென நம்புவோம்.

- த. நடராசா (நூலகர்)

விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# தலைவலி நோய்க்கு யோகாசன சிகிச்சை

தலைவலி ஏற்பட பலநூறு காரணங்கள் இருந்தாலும் அடிப்படையான காரணங்கள் செரியாமை, மலச்சிக்கல், வாயுக்கோளாறு முற்றும் அதிக அமில சுரப்பு ஆகியவையே.

மேற்கண்ட நிலைகள் ஏற்படக் காரணம் நேரம் தவறி உண்பது, காபி, தேநீர், குளிர்பானங்கள் அதிகம் குடிப்பது, அதிக கவலை, தீவிர ஆலோசனை, நம்பிக்கையின்மை, பதட்டம் போன்ற சூழ்நிலைகளே ஆகும்.

இயற்கையின் விதிகளை மீறும் போது, இயற்கை நமக்கு அளிக்கும் தண்டனையே நோய். அதில் ஒன்றுதான் தலைவலி நோய்.

பலநோய்களுக்கு முதல் அறிகுறியே இந்த தலைவலிதான். இந்த நோயை யோகாசன மருத்துவத்தில் எளிதில் போக்கலாம்.

முதலில் சித்த ஆயுள்வேத மருத்துவத்தில் பேதி மருந்து சாப்பிட வேண்டும். அனைத்து தலைவலிக்கும் யோகாசன சிகிச்சை திட்டம்

1. வாமனதௌதி கிரியை
2. நேத்திகிரியை
3. அர்த்தசிரசாசனம்
4. நாடிசுத்தி பிராணாயாமம்
5. சலபாசனம்
6. தனுராசனம்
7. வக்ராசனம்
8. அர்த்தஹலாசனம்
9. சவாசனம்
10. தியானம்

மேற்படி பயிற்சிகளை முறையாக கற்று தொடர்ந்து செய்து வந்தால் சைனஸ் தலைவலி முதல் சாதாரண தலைவலி வரை குணப்படுத்தலாம். தலைவலியை தலைதெறிக்க ஓட செய்யலாம்.

## 1. வாமனதௌதி கிரியை

இது ஷட்கிரியைகளில் மிக முக்கியமானது. நிணநீர் மண்டலத்தை தூண்டி கழிவுகளை வெளியேற்ற உதவுகின்றது. நோயாளிகளுக்கு தானாகவே வாந்தி எடுத்ததும் தலைவலி போய்விடும். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த கிரியை உடன்பலன் தரும் யோகாசன சிகிச்சை நிபுணர்களிடம் நேரில் கற்றுச் செய்ய வேண்டும். ஆயுர் வேதத்தில் இது 'வாந்தியம்' என்று அழைக்கப்படுகிறது.

## 2. நேத்தி கிரியை



குடுவை வைத்து செய்யும் பயிற்சி. இந்த குடுவை இயற்கை வைத்திய கடைகளில் கிடைக்கும். பிளாஸ்டிக்கால் ஆன இந்த குடுவையில் வெதுவெதுப்பான உப்பு கலந்த நீரை ஊற்றி வலது மூக்கு துவாரத்தில் வைத்து உறிஞ்சி முன்னால் குனிய இடது மூக்கு துவாரத்தால் நீர் வெளிவந்து விடும். அதுபோல் இடது முக்கு என்று மாற்றி செய்ய வேண்டும். மூக்கை நன்கு சிந்தி நீரை வெளியேற்ற வேண்டும். இந்த கிரியையும் கற்று செய்வது நல்லது.

இதனால் சைனஸ், மூக்கில் அலர்ஜி, சளிபிடித்தல், ஒற்றை தலைவலி, ஆஸ்துமா போன்ற நோய்கள் தீவிரம் குறையும். நல்ல தூக்கம் ஏற்படும். மனஅமைதி ஏற்படும். கோபம் குறையும். ஞாபகசக்தி, மனஒருமைப்பாடு வளரும். இரவில் செய்வது நல்லது.

## 3. நாடிசுத்தி பிராணாயாமம்



வலது மூக்கு துவராத்தில் மெதுவாக வெளிமூச்சை எடுத்து நிறுத்தாமல் இடது மூக்கு துவாரத்தில் வெளியிட வேண்டும். பிறகு இடது மூக்கு துவாரத்தில் வெளிமூச்சை எடுத்து வலது மூக்கு துவாரத்தில் மெதுவாக வெளியிட வேண்டும். இதுபோன்று ஐந்து முதல் 10 தடவை தவறாது செய்து வந்தால் தலைவலி ஏற்படாது. நாடிகள் தூய்மையும் காலை, மாலை வெறும் வயிற்றில் செய்து வந்தால் நோய் சீக்கிரம் தீரும். நல்ல தூக்கம் வரும்.

## 4. சலபாசனம்



வெட்டுக்கிளி ஆசனம் எனப்படும் இது எளிதான ஆசனம். விரிப்பில் குப்புறப்படுத்து கைகளை உடம்புக்கு பக்கத்தில் வைத்து கொள்ள வேண்டும். இரண்டு கால்களையும் உயரே தூக்கி 20 எண்ணிக்கை வைத்திருக்க வேண்டும். முடியாதவர்களுக்கு ஒரு பெஞ்ச் மீது கால்களை தூக்கி வைக்கலாம்.

மார்பு, உதரவிதானம் அழுத்தப்பட்டு சமான வாயு சீர்செய்யப்படுகிறது. மணிப்பூரக சக்ரம் பலப்படும். கிட்னி, வயிறு பலம் பெறுகிறது. செரிமான சக்தி பலப்படுகிறது.

## 5. அர்த்த சிரசாசனம்



சிரசாசனம் செய்யத் தொடங்கும் ஆரம்ப நிலையே இது எளிதாக யாவரும் பழகலாம். காலை, மாலை 200 எண்ணிக்கை செய்து வந்தால் புவிசர்ப்பு சக்தியால் அதிக இரத்தம் தலைப்பகுதிகளுக்கு பாயும். தலையில் உள்ள அக்குபிரஷர் புள்ளிகள் (point) அழுத்தப்பட்டு நரம்புகள் தூண்டப்படுகிறது. தலையில் ஏற்படும் பாரம், வலி, மயக்கம், சோர்வு நிலை ஆகியவை தீரும்

## 6. தனுராசனம்



இந்த ஆசனத்தை தவறாது செய்து வந்தால் செரியாமையே ஏற்படாது. அதிக அமில சுரப்பு கட்டுப்படும். 'சோலார் பிளக்கஸ்' (Solar Plexus) ஏற்ற இறக்கங்களை சீர்செய்கிறது. தொந்தி குறையும். மலச்சிக்கல் தீரும். கால்முட்டிகளை தூக்க முடியாதவர்கள் தலையணையை வைத்து அதன் மீது முட்டிகளை வைத்து தலையை தூக்கி எளிதில் பழகலாம். காலை, மாலை தொடர்ந்து செய்தால் தலைவலி நிரந்தரமாக தீரும்.

## 7. அர்த்தஹலாசனம்

(Ardha Halasana)



பாதி ஏற்கலப்பை ஆசனம் என்று பெயர். விரிப்பின் மீது படுத்து ஒவ்வொரு காலாக பூமியிலிருந்து ஒன்றரை அடி தூரம் தூக்கி நிறுத்த வேண்டும். 15 எண்ணிக்கை இருக்க வேண்டும். அடுத்து இரண்டு கால்களையும் சேர்த்து தூக்கி நிறுத்த வேண்டும். மூன்றாவதாக 90 டிகிரிக்கு இரண்டு கால்களையும் தூக்கி நிறுத்தவும். ஒவ்வொன்றையும் 15 எண்ணிக்கை செய்தால் போதும்.

உடலில் உள்ள 'ஆரா' எனும் ஒளிக்கூடு சீர் செய்யப்படுகிறது. 'ஆரா' சீராக இருந்தால் தான் மருத்துவம் பயன் தரும். வயிற்று உள்உறுப்புகள் பலம் பெறும். தொப்பை குறையும். உடல் லேசாக ஆகும்.

## 8. வக்ராசனம் (Vakrasana)



எளிய ஆசனம், வலது இடது பகுதிகளை சமசீராக வைக்கிறது. ஈரல், வயிறு நேரடியாக அழுத்தப்பட்டு பலம் பெறுகிறது. இரத்த ஓட்டத்தை முதுகு தண்டு பெற்று புத்துணர்வு பெறுகிறது. யாவரும் கற்று பலன் அடையலாம்.

## 9. சவாசனம்

விரிப்பில் படுத்து ஓய்வு எடுக்கும் நிலை. கண்களை மூடி கால் பாதம் முதல் தலைவரை நினைத்து பார்த்து முழு ஓய்வு பெறுவதாக நினைக்க வேண்டும். அதிக இரத்த அழுத்தம் உயர் சமப்படும். படபடப்பு குறையும்.

## 10. தியானம்



பத்மாசனம் அல்லது சகாசனம் போட்டு உட்கார்ந்து கண்களை மூடி மூச்சை கவனித்து வந்து பிறகு வனத்தை புருவமத்தியில் வைத்து பழகி வந்தால் மனம் அமைதி அடையும். ஐந்து நிமிடம் வரை முயற்சி செய்து வந்தால் போதும். பதட்டம் குறையும். அமைதி ஏற்படும்.

## முடிவுரை

எளிய பயிற்சிகளே இங்கு தரப்பட்டுள்ளது. தவறாது செய்து வரவும். கண்ணாடி போட்டால் தான் தலைவலி தீரும் என்று நினைக்கவேண்டாம். அடிப்படை காரணத்தை அறிந்து அதை நீக்கவும் தொடர்ந்து செய்து வரும் பயிற்சிகளால் எல்லாகாரணங்களும் நீங்கி விடும்.
ஆயுள்வேத மருந்து கடைகளில் விற்கும் 'அசனஏலாதி தைலம்' வாங்க முறைப்படி தலைமுடிக்கு செய்து வந்தால் துரித பலனை அடையலாம். பயன்படுத்தும்முறை தெரியாதவர்கள் வைத்தியர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளவும். இரவில் படுக்கையில் படுக்கும்போது தலையணை வைத்து படுப்பதை தவிர்க்கவும். இந்நோய்க்கு தலையணை ஒரு எதிரி. ஆரம்பத்தில் சிரமமாக இருக்கும். படுக்கைவிரிப்பை மடித்து வைத்து படுக்கவும். தலைக்கு தலையணை வைப்பது நச்சு அரவத்திற்கு (பாம்பு) ஒப்பாகும் என்கிறது ஒரு மருத்துவபழமொழி. இனியும் 'அறையில் தொலைத்து விட்டு வாசலில் தேடவேண்டாம்' நம்பிக்கையுடன் பயிற்சிகளை தொடர்ந்து செய்து வரவும். தலைவலி தீர்ந்து நிம்மதியாக வாழுங்கள்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
416.289.2033 after 7:00pm


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# மனித வாழ்வு எதற்காக



சத்குரு ஜக்கி வாசுதேவ்

மனித வாழ்வு எதற்காக, ஏன் இந்தப் பிரபஞ்சம் இருக்கின்றது என்று கேட்கும்போதெல்லாம் நான் உங்களுக்குக் கதைகள்தான் சொல்லவேண்டும். ஒரு நாள் கடவுள் வேலையேதுமின்றி அமர்ந்திருந்தார். அப்போது அவர் கோலிகுண்டு விளையாடிக் கொண்டிருந்தார். ஒரு கோலி இங்கே விழுந்து அது பூமியானது. மற்றொன்று அங்கே விழுந்து சூரியன் ஆனது. வேறு ஏதோ செய்தார். மனிதர்கள் உருவானார்கள். இது போன்ற கதைகளை நான் உங்களுக்குச் சொல்லிக் கொண்டே போகலாம். நான் என்ன கதைகளை உங்களுக்குச் சொன்னாலும் சிலர் அவற்றை நம்பலாம். சிலர் அவற்றை நம்பாமலும் இருக்கலாம். நீங்கள் இந்தக் கதைகளை நம்பினாலும் நம்பாவிட்டாலும் உங்கள் வாழ்க்கை எந்த வழியிலும் வளமடையப் போவதில்லை. உங்களில் பலர் இதுவரையில் ஏதோவொன்றில் எப்போதுமே நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்.

*ஈஷா யோக மையம் - வெள்ளியங்கிரி மலைச்சாரல், கோயம்புத்தூர்*
*E-mail: yogacenter@ishafoundation.org*
*website: www.ishafoundation.org or www.ishayoga.org*

இங்கே இருக்கும் உங்களில் எவ்வளவு பேர் கடவுள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள், (நிறைய பேர் கை தூக்குகிறார்கள்) சரி. எவ்வளவு பேர் கடவுள் மீது நம்பிக்கையின்றி இருக்கிறீர்கள், மிகச் சிலர்தான்! சிலர் கடவுளை நம்புகிறார்கள். சிலர் கடவுள்மீது நம்பிக்கையற்று இருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தில், உங்களில் எத்தனைபேர் இரண்டு கைகள் உங்களுக்கு இருப்பதாக நம்புகிறீர்கள். அவர்கள் அனைவரும் ஒரு கையை உயர்த்துங்கள். உங்களுக்கு இரண்டு கைகள் இருப்பதாக நீங்கள் நம்புகிறீர்களா, அல்லது உங்களுக்கு இரண்டு கைகள் இருப்பது உங்களுக்குத் தெரியுமா, கைகளைக் காண்பதற்கு நமக்குக் கண்களே இல்லாவிட்டாலும் கூட, நமக்கு இரண்டு கைகள் இருப்பதை அனுபவபூர்வமாய் அறிவீர்கள், இல்லையா, யாரேனும் உங்களிடம் ஒரு விவாதம் தொடங்கி உங்களுக்குக் கைகளே இல்லையென நிரூபிக்க முடியுமா, அது சாத்தியமா, இந்த விவாதம் மிகவும் டோகும்போது அவருக்கு ஓங்கி ஒரு அறை கொடுத்தால், உங்களுக்குக் கைகள் இருக்கின்றன என்பதை அவர் அறிந்துகொள்வார். உங்களுக்குக் கைகள் இருப்பதை அறிவீர்கள். ஆனால் கடவுளை மட்டும் நம்புகிறீர்கள். இது ஏன், நமக்கு எதுவெல்லாம் தெரியாதோ, அவற்றை நாம் நம்புகிறோம். சிலர் கடவுள் இருக்கிறார் என்று நம்புகிறார்கள், சிலர் கடவுள் இல்லையென்று நம்புகிறார்கள். நீங்கள் நம்பினாலும், நம்பாவிட்டாலும் அவற்றால் எந்தப் பயனும் இல்லை. எனக்குத் தெரியாது என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டால்தான் ஒரு தேடுதல் உங்களுக்குள் துவங்கும். தேடுதலுக்கான தேவை ஒருமுறை வந்துவிட்டால், அதற்கான விடை வெகுதூரத்தில் இல்லை. ஒரு முறை நீங்கள் ஏதாவது ஒன்றை நம்பத் தொடங்கிவிட்டால், உங்களுக்குள் உள்ள தேடுதல் அழிந்துவிடும். நீங்கள் ஒரு முடிவுக்கு வந்து விடுகிறீர்கள். ஏதாவதொன்றைப் பற்றி ஒரு முறை நீங்கள் முடிவு செய்து விட்டால் உண்மையைப் பற்றி அறிவதற்கான அடிப்படை வேட்கையே உங்களுக்குள் அரிந்துவிடும்.

நீங்கள் கௌதம புத்தரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா, ஒரு முறை புத்தர் அதிகாலைப் பொழுதில் சூரியோதயத்திற்கு முன்பு தனது சீடர்களுடன் சத்சங்கத்தில் அமர்ந்திருந்தார். இன்னும் இருட்டாகவே இருந்தது. அப்போது ஒரு மனிதர் அங்கே வந்தார். அவர் ஒரு ராமபக்தர். அவர் வாழ்க்கை முழுவதும் சொல்லிக் கொண்டிருந்தது 'ராம்! ராம்! ராம்!' தான். வேறெதையும் அவர் சொன்னதில்லை. அவரது ஆடைகளில் கூட முழுவதுமாக ராம், ராம் என்றே எழுதி இருந்தது. அவர் கோவிலுக்குச் செல்பவர் மட்டுமல்ல. நிறைய கோவில்கள் கட்டியவரும்கூட. வயதாக வயதாக ஒரு சிறு சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. 'என் வாழ்க்கை முழுவதும் நான் ராம்! ராம்! என்றே சொல்லி வந்துள்ளேன். ஆனால் கடவுள் மீது நம்பிக்கை இல்லையென்று 30:40 பேர் இங்கே கைதூக்கினார்கள். அவர்களுக்கும்கூட சூரியோதயம் நடக்கின்றது. சுவாசமும் நடக்கின்றது. அவர்களும் சந்தோசமாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்விலும் பல சந்தோசமான நிகழ்ச்சிகள் நடக்கின்றன. நான் வெறுமனே அமர்ந்து ராம், ராம் என சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஒரு வேளை இவர்கள் கூறுவதைப்போல கடவுள் இல்லையென்றால்... எனது வாழ்க்கை முழுவதும் வெறுமையாகிவிடும், ஒன்று மில்லாமல் போய்விடுமே' கடவுள் இருக்கிறார் என்பது அவருக்குத் தெரியும். ஆனாலும் சிறு சந்தேகம் வந்துவிட்டது. அவ்வளவுதான்.

ஆனால் எப்படி இந்தக் கேள்வியை புத்தரிடம் அனைவர் முன்னிலையிலும் கேட்பது, எனவே அவர் அதிகாலையில் இருட்டாக இருக்கும்போதே வந்து ஒரு மூலையில் நின்றவாறு 'கடவுள் இருக்கின்றாரா, இல்லையா' என்ற கேள்வியைக் கேட்டார். கௌதம புத்தர் அவரைப் பார்த்து 'இல்லை' என்று கூறினார். இந்த பதிலைக் கேட்டவுடன் சீடர்கள் மத்தியில் ஒரு நிம்மதிப் பெருமூச்சு வெளிப்பட்டது. கடவுள் இருக்கின்றாரா இல்லையா என்ற போராட்டம் அவர்களுக்குள் அன்றாடம் நிகழ்ந்து கொண்டிருந்தது. பலமுறை அவர்கள் இந்தக் கேள்வியை கௌதமரிடம் கேட்கும் போதெல்லாம் ஒவ்வொரு முறையும் கௌதமர் அமைதியாகவே இருந்துவிடுவார். இப்போது தான் முதன்முறையாகத் தெளிவாகவும், அழுத்தமாகவும் கடவுள் இல்லை என்று கூறியிருக்கிறார்.

கடவுள் இல்லாமல் இருப்பதென்பது எவ்வளவு மகிழ்ச்சியானது! உங்கள் வாழ்வில் நீங்கள் எது வேண்டுமானாலும் செய்யமுடியும். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள், என்ன செய்யவில்லை என்பதை கவனித்துக் கொண்டிருக்க ஒருவரும் இல்லை. உங்களை நரகத்தில் தள்ளித் துன்புறுத்துவதற்கு யாருமே இல்லை. இது உங்களுக்கு முழுமையான சுதந்திரம் இல்லையா? கடவுள் இல்லை யென்றால் உங்களுக்கு முழுமையான சுதந்திரம். சீடர்கள் மத்தியில் நிறைவான சந்தோசம். அந்த நாள் சந்தோசமான நாளாக இருந்தது.

மாலை வேளையில், புத்தர் அவருடைய சீடர்கள் மத்தியில் அமர்ந்திருந்தபோது, மற்றொரு மனிதர் அங்கே வந்தார். அவர் ஒரு சார்வாகர். அந்த நாட்களில் சார்வாகர்கள் என்றொரு பிரிவினர் இருந்தனர். அவர்கள் பொருளீட்டுவதில் மட்டுமே நாட்டம் உள்ளவர்கள். அவர்கள் பார்ப்பதை மட்டுமே நம்புபவர்கள். வேறு எதையும் நம்புவதில்லை. அவர்கள் உங்கள் நகருக்கு வந்து உங்களிடம் சவால் விடுவார்கள். 'யாராவது கடவுள் இருக்கின்றார் என்று நிரூபித்தால் நான் நூறு பொற்காசுகள் தருவேன். இல்லையென்றால், நீங்கள் அனைவரும் சேர்ந்து நூறு பொற்காசுகளை எனக்குத் தரவேண்டும்.'

'அவருடைய வாழ்க்கை முழுவதும் இந்த வழியில் மட்டும் சம்பாதித்தார். ஊர் ஊராகச் சென்று 'கடவுள் இல்லை, கடவுள் இல்லை' என நிரூபித்து வந்தார். இது அவருடைய வேலை. கடவுள் இல்லையென்பதை ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிரூபித்து அவர் தனது துறையில் பெரிய மனிதராகத் திகழ்ந்தார்.

சத்குருவால் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியையால் எதிர்வரும் July 04, 07 தொடக்கம் July 10, 07 வரை யோகா வகுப்புக்கள் நடத்தப்படும்.

காலம்: காலை 9:30 மணி தொடக்கம் 12:45 வரை
அல்லது மாலை 6:30 மணி தொடக்கம் 9:45 வரை
சனிக்கிழமை காலை 8:00 மணி தொடக்கம் 2:00 மணி
ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி தொடக்கம் 5:00 மணி வரை
இடம்: The Princess Banquet
3330 Pharmacy Ave.
Pharmacy & Mcnicoll
Scarborough, M1W 2V8, cabada
ரொறொன்ரோவில் தொடர்புகளுக்கு: 416.699.0951

தற்போது வயது ஆக ஆக சிறு சந்தேகம் வந்துவிட்டது. 'எனது வாழ்க்கை முழுவதும் கடவுள் இல்லையென்றே நான் மக்களிடம் கூறி வந்திருக்கிறேன். ஒரு வேளை கடவுள் இருந்தால், நான் அங்கே போகும்போது அவர் என்னை விடுவாரா, நரகம் என்று ஏதோ இருப்பதாக மக்கள் சொல்கிறார்களே'. சிறு சந்தேகம்.... கடவுள் இல்லையென்று அவருக்குத் தெரியும். இதனை அவரது வாழ்க்கை முழுவதும் நிரூபித்தும் வந்திருக்கிறார். ஆனால் ஒரு சிறு சந்தேகம்... 'ஒரு வேளை கடவுள் இருந்தால், எதற்கு வம்பு. நகரிலே பூரணமடைந்த மனிதர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் கேட்போம். ஆகவே மாலை வேளையில் இருட்டியபிறகு அவர் கௌதமரிடம் சென்று 'கடவுள் இருக்கின்றாரா,' என்று கேட்டார். கௌதமர் அவரைப் பார்த்து 'ஆமாம்' என்று கூறினார். மீண்டும் ஒரு மிகப்பெரிய போராட்டம் சீடர்களிடையே துவங்கியது. கடவுள் இல்லையென்று அவர் கூறியதால் காலை முதல் அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஆனால் மாலையிலோ கடவுள் இருக்கின்றார் என்று கூறுகிறார். ஏன் இப்படி?

வளர்ச்சியடைவதற்கான தேவை உங்களுக்குள் ஆதாரமாக இருக்கும்போது இது உங்களுடைய நோக்கமாக இருக்கும்போது எது உங்களுடைய அனுபவத்தில் இருக்கின்றது எது இல்லை என்பதைப் பற்றிய தெளிவு முதலில் உங்களுக்கு இருக்கவேண்டும். உங்கள் அனுபவத்தில் இருப்பது எது இல்லாதது எது என்பதைப் பற்றித் தெளிவாக வரையறுத்துக் கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்தில் இருப்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் அனுபவத்தில் எது இல்லையோ அதனை இல்லையென நீங்கள் கூறத் தேவையில்லை. வெறுமனே 'எனக்குத் தெரியாது' என்று கூறுங்கள். நீங்கள் 'தெரியாது' என்று ஏற்றுக்கொண்டால் பிறகு வளர்ச்சி ஏற்படும். தற்போது உங்களுக்கு எதுவெல்லாம் தெரியாதோ அவற்றை நம்பத் தொடங்குகிறீர்கள். உங்களுக்கு அனைத்துமே தெரிந்ததாக எண்ணுகிறீர்கள்.

இந்தியாவில் உங்களுக்குக் கடவுளைத் தெரியும். அவர் எங்கிருக்கிறார் என்று தெரியும். அவருடைய பெயரும் உங்களுக்குத் தெரியும். அவருடைய மனைவி யாரென்று உங்களுக்குத் தெரியும். அவருக்கு எத்தனை குழந்தைகள் என்று உங்களுக்குத் தெரியும். அவருடைய பிறந்தநாளும் தெரியும். அவருடைய பிறந்தநாளிற்கு அவர் விரும்பும் இனிப்பு என்ன என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் உங்களுக்குள் என்ன நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாது. தற்போதைய முழுப்பிரச்சினையும் அதுதான். உங்களுக்கு சொர்க்கத்தின் முகவரி கூடத் தெரியும். ஆனால் இந்த கணத்தில் உங்களுக்குள் என்ன நடக்கிறது என்பதைப் பற்றிய விழிப்புணர்வு உங்களுக்கு இல்லை.

இப்போது உங்களுக்குள் வளர்ச்சி நடைபெற வேண்டுமெனில் இப்போது உங்கள் அனுபவத்தில் என்ன இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். இப்போது உங்கள் அனுபவத்தில் என்ன இருக்கின்றது, உங்கள் உடலை ஓர் அளவிற்கு உணர்ந்திருக்கிறீர்கள். இந்த மனதை ஓரளவிற்கு உணர்ந்திருக்கிறீர்கள் இந்த உலகை ஓர் அளவிற்கு உணர்ந்திருக்கிறீர்கள். இந்த உடலையும் மனத்தையும் இயக்குகின்ற சக்தியினை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஒரு சில கணங்களை நீங்கள் உணர்ந்திருக்க முடியும். இதைத்தாண்டி நீங்கள் எதையும் உணரவில்லை. மற்றவை எல்லாமே கற்பனைதான். இந்த சமூகம் எந்த வழியில் கற்பித்ததோ, அதே வழியில்தான் உங்கள் கற்பனையும் உள்ளது. உங்கள் அனுபவத்தில் எது இருக்கின்றது, எது இல்லை என்று பாருங்கள். உங்களது அனுபவத்தில் இல்லாததை எல்லாம் 'எனக்குத் தெரியாது' என்று நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள். இது மிகமிக அவசியமானது. இல்லாவிட்டால் உங்கள் வாழ்க்கை முழுவதும் பாசாங்காகிவிடும்.




**வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.**

*பரம்ஜி* - **416.230.1107**

**PARAM GNANASWARAN**
Broker
**HOME LIFE GTA REALTY INC.** Brokerage*
**Office East:** 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
**416.321.6969**
**Office West:** 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
**905.712.2666**
HOMELIFE HIGHER STANDARDS
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

# வாரிசு அரசியல்: கேள்விக்குறியாகும் தி.மு.க.வின் எதிர்காலம்

கடந்த அறுபது வருட தமிழக அரசியல் வரலாற்றைத் தீர்மானித்தவர் அண்ணாத்துரை. பெரியாரிடம் இருந்து வந்து திரா விட முன்னேற்றக் கழகத்தை அண்ணாத்துரை தொடங்கிய பிறகு, அவரும் அவருக்குப் பிறகு அவரது தம்பிகளும் தான் தமிழகத்தை வழிநடத்தி இருக்கிறார்கள். இன்று, தமிழகத்தில் இயல்பானதுதான் என்பது போல் ஆக்கப்பட்டுள்ள வாரிசு அரசியல் அண்ணாத்துரை அறியாதது. இன்னும் இரண்டு வருடங்களில் அண்ணாத்துரையின் நூற்றாண்டுக்கு விழா கொண்டாடப்பட இருக்கும் சூழ்நிலையில், அவரது வளர்ப்பு மகனான மருத்துவர் பரிமளம் சென்னையில் நுங்கம்பாக்கத்தில் சாதாரண ஒரு நடுத்தர குடும்பத்தவராக முற்றிலும் அரசியலில் இருந்து விலகிய வாழ்க்கையை நடத்தி வருகிறார். திராவிடத்தையும் போராட்ட குணத்தையும் தம்பிகளுக்கு சொல்லிக்கொடுத்த அண்ணாத்துரை, போற்றத்தக்க அவரது இந்தப் பண்பை மட்டும் ஏனோ தம்பிகளுக்கு கற்றுக்கொடுக்காமல் மறைந்துவிட்டார். அதன் விளைவு... தமிழர்கள் வரலாற்றையே புரட்டிப்போட்ட தி.மு.க., இன்று முற்றிலும் அதன் தலைவர் கருணாநிதியின் குடும்பத்தினர் நடத்தும் கட்சி என்ற நிலைக்கு கீழே இறங்கி இருக்கிறது. கருணாநிதி குடும்ப மோதல்களால் கேள்விக்குறியாகி இருக்கிறது தி.மு.க.வின் எதிர்காலம்!

அண்ணாத்துரைக்குப் பிறகு தி.மு.க.வின் தலைவராகத் தகுதியுள்ளவராக அறியப்பட்டவர் நாவலர் நெடுஞ்செழியன். படிப்பறிவாலும் அரசியல் அனுபவத்தாலும் அண்ணாவுக்கு நிகராக பார்க்கப்பட்டவர். அண்ணாவுக்குப் பிறகு நெடுஞ்செழியன் என்பதுதான், அண்ணா உட்பட எல்லோரது மனதிலும் இருந்தது. ஆனால், அண்ணா மறைந்ததும் காட்சிகள் மாறத் தொடங்கின. தனது அரசியல் சாணக்கியத்தாலும் சூழ்ச்சியாலும் நாவலரைத் தடுத்து, தி.மு.க.வின் தலைவராகவும் தமிழக முதல்வராகவும் ஆனார் கலைஞர் கருணாநிதி. இதற்கு அவருக்கு துணை நின்றவர் அப்போது தமிழகத்தில் மிகப்பெரிய சக்தியாக இருந்த எம்.ஜி.ஆர். அன்று தொடங்கி, தி.மு.க. கருணாநிதியின் குடும்பக் கட்சி என்று ஆகிவிட்டது.

## சுந்தர பாண்டியன்

தனக்குப் பிறகு கட்சியையும் ஆட்சி அதிகாரத்தையும் தனது வாரிசுகளிடம் கை மாற்றிவிட்டுச் செல்ல தடையாக, கட்சிக்குள் வளர்ந்துவரும் இரண்டாம்கட்ட தலைவர்களின் வளர்ச்சியை சிதைத்து, வாரிசுகளுக்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதையே ஒரு பெரும் பணியாக தொடர்ந்து செய்துவந்திருக்கிறார் கருணாநிதி. இதில் பெரிய முரண், கலைஞரின் இந்த களையெடுப்பில் முதலில் பலியானவர், நெடுஞ்செழியனை வீழ்த்த கலைஞருக்கு துணை நின்ற எம்.ஜி.ஆர். என்பதுதான்.

எம்.ஜி.ஆர்., தி.மு.க.வில் இருந்து வெளியேற்றப்பட்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கிய போது, வீழ்த்த முடியாத பெரும் சக்தியாக இருந்த தி.மு.க. தனது பலத்தில் பாதியை இழந்தது. பிறகு, வைகோவை வெளியேற்றிய போது, இன்னொரு பகுதியையும் இழந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக தொண்டர்கள் நம்பிக்கை இழந்தார்கள். கொள்கைபிடிப்பு இல்லாமல் ஆனார்கள். விளைவு... இன்று தி.மு.க.வில் இருக்கும் தொண்டர்கள் அதன் கொள்கைக்காக இருப்பவர்கள் இல்லை அதிகாரத்துக்காக மட்டுமே இருப்பவர்கள். காசு கொடுத்தால் தோரணம் கட்டுவார்கள். கட்சிக்காக உழைப்பாளர்கள் என்னும் நிலை. பத்திரிகையாளர் ஞாநி சொல்வது போல்... "இப்போது தி.மு.க. கொள்கைகளும் லட்சிய வேகமும் கொண்ட ஒரு அரசியல் கட்சி அல்ல ஒரு கார்ப்பரேட் கம்பெனி."

கருணாநிதியின் குடும்பம் தான் தி.மு.க. என்றான பிறகு, செல்வாக்குள்ள இரண்டாம் கட்ட தலைவர்களே இல்லாமல் ஆகிவிட்டார்கள். இதனால், அதிகாரத்தை வாரிசுகளுக்கு கைமாற்றிவிடுவதில் இன்று கலைஞருக்கு எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால், கலைஞருக்குப் பிறகு தி.மு.க.வையும் ஆட்சியையும் கைப்பற்ற போகும் அந்த வாரிசு யார் என்பதுதான் இப்போது புதிதாக முளைத்திருக்கும் சிக்கல்!

பொதுவாகத் தமிழ் குடும்பங்களில், குடும்ப அதிகாரம் வயதானவர்கள் கையில் தான் இருக்கும். குடும்ப நிகழ்ச்சிகளில் அவர்களுக்கு அவ்வளவு மரியாதை கொடுப்பார்கள். அவர்களிடம் கேட்டுதான் எல்லாவற்றையும் செய்வார்கள். ஆனால், இது ஒரு தோற்றம் மட்டும்தான். உள்ளே சென்று பார்த்தால் தான் தெரியும் அவர்களது உண்மையான நிலை. குடும்பத்துக்குள் அவர் ஒரு காட்சிப் பொருள் மட்டும்தான். குழந்தைகள் அதிகாரத்தை கையில் எடுத்தபிறகு, அவர்களது சொல்லுக்கு ஆடும் பொம்மை தான் அவர். இந்த நிலையில் தான் இப்போது கலைஞர் இருக்கிறார் என்கிறார்கள் விவரம் தெரிந்தவர்கள். ஆட்சியும் கட்சியும் அவரை முன்வைத்து, அவரது குடும்பத்தினர் அதிகாரம் செய்யும் இடங்கள் ஆகிவிட்டன. இதனால், குடும்பத்துக்குள் நிகழும் சிறு சிறு மோதல்களும் கட்சியையும் ஆட்சியையும் பாதிக்கின்றன. இதில் கலைஞர் பார்வையாளர் மட்டும்தான்.



கருணாநிதியின் மனசாட்சி என சொல்லப்பட்டவர் முரசொலி மாறன். கருணாநிதியின் அக்கா மகன். மத்திய அரசியலில் இரண்டாம் நிலை தி.மு.க. தலைவர்கள் எவரையும் வளர விடாமல் டில்லியைத் தன் கட்டுக்குள் வைத்திருக்க கலைஞரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் முரசொலி மாறன். முக்கியமாக டில்லியில் ஆரம்பகால வைகோவின் வளர்ச்சியைத் தடுப்பதில் முக்கிய பங்காற்றினார் முரசொலி மாறன். வைகோ வெளியேற்றத்துக்குப் பிறகு, மத்திய அரசியலுக்கு முரசொலி மாறன், மாநில அரசியலுக்கு ஸ்டாலின் எனத் தெளிவான முடிவுடன் இருந்தார் கருணாநிதி. முரசொலி மாறன் மறைவுக்குப் பிறகு, வேறு யாரையும் நம்ப முடியாது என்று, அரசியல் முன் அனுபவமே இல்லாத முரசொலி மாறன் மகன் தயாநிதி மாறனை மத்திய அமைச்சராக்கி டில்லியைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பை அவர் கையில் கொடுத்தார். அவரும் தனக்கு அளிக்கப்பட்ட வேலையைக் கச்சிதமாகத் தான் செய்து வந்தார். தயாநிதி மாறனின் அண்ணன் கலாநிதி மாறனின் "சன்" தொலைக்காட்சி, கதிரவன் பத்திரிகை ஊடகப் பலமும் பணபலமும் அவருக்கு பக்கபலமாக இருந்தன. கடைசி நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டமன்றத் தேர்தல் இரண்டிலும் தி.மு.க. பெற்ற வெற்றியில் இந்த சகோதரர்களின் பணி மிகப்பெரியது. கருணாநிதியின் வாகனம் உட்பட அவரது பிரச்சாரத்தை வடிவமைத்தவர்கள் இவர்கள்தான். அ.தி.மு.க.வின் பணபலத்தை எதிர்கொள்ள, "ஒவ்வொரு சட்டமன்ற தி.மு.க. வேட்பாளருக்கும் செலவுக்காக தலா 50 லட்சம் ரூபாயை இவர்கள் கொடுத்துள்ளார்கள்"என்று சொல்லப்படுகிறது.

இப்படி கட்சிக்குள் மிகப் பலமாக காலூன்றிய மாறன் சகோதரர்கள், கருணாநிதிக்குப் பிறகு மொத்தமாகக் கட்சியைக் கைப்பற்றும் திட்டத்தில் இறங்கியதுதான் இப்போதுள்ள சிக்கல் எல்லாவற்றுக்கும் காரணம் என்று சொல்லப்படுகிறது.

மாறன் சகோதரர்களின் இந்த திட்டம் தெரிய வந்ததும், நானா நீயா என்று எலியும் பூனையுமாக இருந்த கருணாநிதி புதல்வர்கள் ஸ்டாலினும் அழகிரியும், நம் இரண்டு பேருக்குமே இல்லாமல் போய்விடும் போலிருக்கிறதே என, பகையை மறந்து இணைந்து மாறன் சகோதரர்களுக்கு எதிரான வேலைகளில் இறங்கினார்கள். தயாநிதி மாறனை கட்சிக்குள் ஓரம்கட்டும் வேலைகள் தொடங்கின. ஸ்டாலின் ரூ அழகிரி கூட்டணியா, மாறன் சகோதரர்களா? என தொடர்ந்த குடும்ப உள் விவகாரம், ஒரு கட்டத்தில் கருணாநிதி மறைவு வரைக்கும்கூட காத்திருக்க முடியாது என்னும் நிலைக்கு மாறன் சகோதரர்களைக் கொண்டு சென்றதாகச் சொல்லப்படுகிறது. ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு, அவரது மாமனாரான என்.டி. ராமாராவின் தெலுங்கு தேசம் கட்சியை உடைத்து ஆட்சியையும் கட்சியையும் கைப்பற்றியது போல், தி.மு.க.வை உடைத்து ஆட்சியைக் கைப்பற்றும் திட்டம் தயாநிதி மாறனுக்கு இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இதனைத் தான் கருணாநிதி சூசகமாக, "முரசொலி மாறன் என்னிடம் கோபித்துக்கி நான் சண்டை போட்டுவிட்டு சென்றிருக்கிறான். மீண்டும் வந்து சேர்வான். ஆனால், ஒரு போதும் என் நாற்காலிக்கு அவன் ஆசைப்பட்டதில்லை" என்று தெரிவித்திருக்கிறார் என்கிறார்கள்.

தி.மு.க.வைப் பிளந்து, முப்பத்தாறு எம்.எல்.ஏ.களை இழுத்து, காங்கிரஸ் மற்றும் அ.தி.மு.க. தரவுடன் ஆட்சியைக் கைப்பற்ற தயாநிதி மாறன் முயற்சித்ததாக சொல்லப்படுகிறது. இதில் தயாநிதி மாறனுக்கு துணையாக இருந்தவர்கள் தென் தமிழகத்தைச் சேர்ந்த தொழிலதிபர் வி.வி.மினரல்ஸ் வைகுண்டராஜன், முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன், பத்திரிகையாளர் சோ எனவும் சொல்லப்படுகிறது. இதனை நிரூபிப்பது போல், வைகுண்டராஜன் மீது ஏகக் கடுப்பில் இருக்கிறது தி.மு.க. ஒட்டுமொத்த அரசாங்கமும் வைகுண்டராஜனுக்கு எதிராக நிற்க, பயந்துபோய் தலைமறைவு வாழ்க்கை நடத்தி வருகிறார் வைகுண்டராஜன். இவர், மறைமுகமாக தென்மாவட்டங்களில் அ.தி.மு.க.வை நிர்வகிக்கும் பெரிய மனிதர் என்பதும் ஜெயா டி.வி.யின் முக்கியமான பங்குதாரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது பதவியையே குறிவைக்கிறார்கள் என்பதால்தான் மிகவும் கடுப்பாகி, தயாநிதி மாறனின் அமைச்சர் பதவியைப் பறிக்கும் கடுமையான முடிவை கலைஞர் எடுத்தார் என்கிறார்கள். பதவி பறிக்கப்பட்ட சூழ்நிலையில், கட்சிக்குள் எந்த சலனமும் இல்லாததால், இப்போது மீண்டும் கலைஞருடன் இணக்கமாக போய் விடும் முயற்சியில் மாறன் சகோதரர்கள் இறங்கி இருக்கிறார்கள். ஆனால், கருணாநிதி ரூ மாறன் சகோதரர்கள் சந்திப்பு நிகழ்ந்துவிடாமல் பார்த்துக் கொள்வதில் ஸ்டாலின் ரூ அழகிரி கூட்டணி இன்று வரைக்கும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. அமைச்சர் பதவியைப் பறித்தது போல், மாறன் சகோதரர்களின் ஊடக அதிகாரத்தைக் குறைக்கும் வேலைகளிலும் கருணாநிதி புதல்வர்கள் இப்போது மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள். பிரச்சினைகளுக்குப் பிறகும் தி.மு.க. செய்திகளை எப்போதும் போலவே சன் தொலைக்காட்சி ஒளிபரப்பி வந்தாலும், ராஜ் தொலைக்காட்சி தான் இப்போது தி.மு.க.வினரின் ஊடகமாக அடையாளம் காணப்படுகிறது. ராஜ் தொலைக்காட்சி அதிபர் ராஜேந்திரனும் தி.மு.க.வில் இணைந்துவிட்டார். கருணாநிதி குடும்பத்தில் இருந்து புதிதாக கலைஞர் டி.வி. தொடங்கும் வேலைகளும் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கலைஞர் தொலைக்காட்சி, சன் தொலைக்காட்சிக்கு மிகப்பெரிய போட்டியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு ஆருடம் சொல்லுவது போல் சன் வாங்குவதாக இருந்த ரஜினியின் சிவாஜி திரைப்பட உரிமையை கலைஞர் தொலைக்காட்சி வாங்கிவிட்டது. இதுபோல் தினகரன் பத்திரிகைக்குப் போட்டியாக ஒரு நாளிதழ் தொடங்கும் திட்டமும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சில வருடங்கள் வந்து நின்றுபோன கதிரவன் நாளிதழை வாங்கவும், தினகரன் ஆசிரியர் குழுவில் பணியாற்றும் முக்கியமான சிலரை அதிக சம்பள ஆசை காட்டி இழுக்கும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. லாட்டரி அதிபர் உஸ்பான் பயாஸ் நடத்திவரும் தமிழ் சுடர் நாளிதழையும் பேசி வருவதாகச் சொல்லப்படுகிறது.

தயாநிதிமாறன் இல்லாத டில்லியைப் பார்த்துக்கொள்ள சகோதரி கவிஞர் கனிமொழியை ராஜ்யசபா உறுப்பினராக்கி டில்லிக்கும் அனுப்பிவிட்டார்கள் கருணாநிதி புதல்வர்கள். கனிமொழியின் சி.ஐ.டி. காலனி வீட்டுப் பக்கமே சென்றிராத ஸ்டாலின், கனிமொழியை ராஜ்யசபா வேட்பாளராக அறிவித்தவுடன், அவரது சி.ஐ.டி. காலனி வீட்டுக்கே போய் அவரை உச்சி முகர்ந்து வாழ்த்தினார். ராஜ்யசபா சான்றிதழ் பெற்றதும் பதில் மரியாதையாக கோபாலபுரம் வீட்டுக்குதான் முதலில் போனார் கனிமொழி. சான்றிதழை தயாளு அம்மாவிடம் கொடுத்து மகிழ... கனிமொழியின் கையைப் பற்றிக்கொண்டார் தயாளு அம்மாள். விரைவில், முரசொலி மாறன் பார்த்துக்கொண்ட வர்த்தகத்துறை அமைச்சராக கனிமொழி பெயர் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கபடுகிறது.



டில்லிக்கு கனிமொழி, கட்சிக்கு அழகிரி, ஆட்சிக்கு ஸ்டாலின் என்ற புதுக்கணக்கில் பயணத்தை தொடங்கி இருக்கிறது இப்போது தி.மு.க. தினகரன் கருத்துக் கணிப்பு உருவாக்கிய பிரச்னைகள், மதுரை வன்முறைகள் ஆகியவற்றால் ஸ்டாலினை துணை முதல்வராக்கி அதிகாரத்தை முழுக்க அவரிடம் ஒப்படைக்கும் முடிவைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்திருக்கிறார் கலைஞர்.

"திட்டங்கள் தெளிவாக இருந்தாலும், அதன் முடிவு கலைஞரின் வாழ்நாளைப் பொறுத்ததுதான்" என்கிறார்கள் விவரம் அறிந்த தமிழகப் பத்திரிகையாளர்கள். "மாறன் சகோதரர்களால் அவ்வளவு சுலபமாக அதிகாரம் இல்லாமல் இருக்க முடியாது. கலைஞருக்குப் பிறகு கட்சியைக் கைப்பற்றும் திட்டத்தை அவர்கள் நிச்சயம் கைவிட மாட்டார்கள். கலைஞர் புதல்வர்கள் மற்றும் புதல்வியின் செல்வாக்கு என்பது கலைஞர் மட்டும்தான். கலைஞருக்குப் பிறகு, இவர்களைவிட பணபலத்திலும் ஊடகப் பலத்திலும் செல்வாக்குடன் இருக்கும் மாறன் சகோதரர்களுக்கு முன்னால் இவர்களால் நிச்சயம் போட்டி போட முடியாது. கொள்கைகளும் லட்சிய வேகமும் கொண்ட அரசியல் கட்சி என்பதில் இருந்து கார்பரேட் (Cooperate) கம்பெனியாக மாறியிருக்கும் தி.மு.க.வை நிர்வகிப்பதில் கருணாநிதி புதல்வர்களைவிட மாறன் சகோதரர்கள் திறமைசாலிகளாக இருப்பார்கள். அவர்களது இப்போதைய கவலை எல்லாம், "பெரியார் மாதிரி கலைஞர் இன்னும் நீண்ட காலம் இருந்தால் என்ன செய்வது என்பதுதான்?" என்கிறார்கள்.

கலைஞருக்குப் பிறகு, ஸ்டாலினை எதிர்கொண்டு சுலபமாக தி.மு.க.வை கைப்பற்றிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் இருந்த வைகோ, ஒரு கட்டத்தில் நம்பிக்கை இழந்து, "பெரியார் மாதிரி இந்த ஆளும் ரொம்ப நாள் இருந்துட்டா என்னப்பா செய்றது "என்றாராம். மாறன் சகே ாதரர்கள் வரவுக்குப் பிறகு, போட்டியில் இருந்து சுத்தமாக வெளியேறினார் வைகோ. போட்டி கருணாநிதி புதல்வர்களுக்கும் மாறன் சகோதரர்களுக்கும் என்றாகிவிட்டது. இப்போது, வைகோ மாதிரி காத்துக்கொண்டிருக்கிறார்கள் மாறன் சகோதரர்கள்.

# விளையாட்டுத் தகவல்கள் 215

**எஸ். கணேஷ்**

## கிளே கிங் நடால் !

### ரெனிஸ்



களிமண் தரை ஆட்டக்காரர்களுக்கான சொர்க்க பூமி பிரெஞ்சு ஓபன் ரெனிஸ், கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட இந்த பிரெஞ்சு ஓபனை 'ரெனிஸின் மெக்கா' என்று கூட அழைப்பார்கள். இந்தப் போட்டியில் வெற்றி பெறுவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. மற்ற தரை களில் விளையாடுவதை விட களிமண் தரையில் விளையாடுவது சற்று அதிசிரமம். ஆனால் 21வயது ஸ்பெயின் வீரர் ரஃபேல் நடாலுக்கு இந்த ஆட்டம் என்றாலே அல்வா துண்டு சாப்பிடுவது போல உற்சாகமாகி வெற்றிக்கொடி நாட்டுவார்.

தற்போது பிரெஞ்சு ஓபனில் மூன்றாவது முறையாக மகுடம் சூடி புதிய சாதனை படைத்துள்ளார். ஆஜானுபாகுவான ரஃபேல் நடால், இத்தனைக்கும் நடால் உலக ரெனிஸ் தரப் பட்டியலில் முதன்மை இடத்தில் உள்ளவர் இல்லை. அந்த வகையில் இவரைக் காட்டிலும் உயர்ந்த இடத்தைப் பிடித்தவர் சுவிற்சலாந்து ரோஜர் பெடரர்.

இந்த ஆண்டு எதிர்பார்த்தது போலவே பிரெஞ்சு ஓபன் ரெனிஸ் போட்டியில் நடாலும், ஃபெடரரும் தான் இறுதிச் சுற்றில் விளையாடினர். ரோலண்ட் காரோஸ் அரங்கத்தில் எதிர்பார்ப்போடு அலைமோதிக் கொண்டிருந்த 20 ஆயிரம் ரசிகர்கள் மத்தியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் கிளே கிங் ஆட்டத்திற்கு தாக்குபிடிக்க முடியாமல் 1 - 3 என்ற செற் கணக்கில் தோற்றுப்போனார் ஃபெடரர்.

பட்டம் வெல்வது என்பதைக் காட்டிலும் இருவருக்குமே இறுதி ஆட்டம் சாதனைக்கு உரியதாக அமைந்திருந்ததால் இந்த ஆண்டு போட்டி உலகப் பார்வையைப் பெற்றிருந்தது. அதில் வெற்றி பெற்றதன் மூலம் ஜான் போர்க்கின் சாதனையை சமன் செய்துள்ளார் நடால். அதாவது தொடர்ச்சியா மூன்றுமுறை பிரெஞ்சு ஓபன் பட்டத்தை வென்ற வீரர்களில் ஒருவராகியுள்ளார் இந்த மல்லார்கா மன்னன்.

அதே நேரம் தோல்வியுற்றதால் ஒரே ஆண்டில் தொடர்ச்சியாக நாலு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற வீரர்கள் வரிசையில் இடம்பெறமுடியாமல் ஏமாற்றம் அடைந்தார் ஃபெடரர். டான் பட்ஜ், ராட் லேவர் ஆகியோர் இதற்கு முன்பு அந்த சிறப்பை பெற்றுள்ளனர். ஆச்சரியப்பட வைக்கும் அழகு இருக்கலாம்.மேதைக்கு உரிய மூளை இருக்கலாம். புலியை வெல்லும் வேகம் இருக்கலாம் என்ன பயன்! தோல்வி எனும் நிலையை அடைந்து விட்டால் எல்லாமே பூஜ்யம் தான்.

போட்டி முடிந்ததும் தனது கருத்தைத் தெரிவித்த நடால், 'ரோஜருக்காக நான் வருத்தப்படுகிறேன். நான் கண்ட நல்லவர்களில் ஒருவர், மேலாக மிகப் பெரிய சாம்பியன். அதே சமயம் இந்த வெற்றி எனக்குச் சந்தோஷம் அளித்துள்ளது' என ரத்தினச் சுருக்கமாக கூறினார்.

போட்டியின்போது கஷ்டப்பட்டு புள்ளிகளைச் சேர்க்கும் போதெல்லாம் ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தும் நடாலின் செயலைக் காண்பவர்கள் தலைக்கனம் கொண்டவரோ என எண்ணத் தோன்றும். ஆனால் குழந்தை மனப்பான்மை கொண்டவர் நடால். இந்த ஆண்டு தொடக்கத்தில் சென்னையில் நடைபெற்ற ஏடிபி போட்டியில் பங்கேற்ற நடாலிடம் ஆட்டோகிராஃப் வாங்க அணிவகுத்த இளைஞர் பட்டாளத்துக்கு பாதுகாப்பு வளையத்தையும் மீறி பொறுமையுடன் கையெழுத்துப் போட்டதே அதற்கு சாட்சி.

வலுவான இடது கை ஆட்டம் குறி தவறாமல் பந்தைச் செலுத்துதல், சாதிக்க வேண்டும் என்ற வைராக்கியம் இவை அனைத்துக்கும் மேலாக களைப்பில்லாமல் விளையாடும் ஆற்றல் ஆகியவற்றால் களிமண் தரையின் அவதாரமாகத் திகழ்ந்துவரும் நடால், ஜோன் மெக்கன்ரோ, ராட் லேவர், இவான் லெண்டில் போரிஸ் பெக்கர் ஆந்த்ரே அகஸ்ஸி, சாம்ப்ராஸ் உள்ளிட்ட ஜாம்பவான்கள் வரிசையில் ஒரு பொக்கிஷமே!

## ஹாட்ரிக் வென்ற ஹெனின்

பிரெஞ்சு ஓபனில் தன்னை அசைக்க முடியாது என்பதை அழுத்தமாக நிரூபித்தார் ஜஸ்டின் ஹெனின். இறுதிப் போட்டியில் அன்னா இவானோவிச்சை மிக எளிதாக வீழ்த்திய இவர். தொடர்ந்து மூன்றாவது முறையாக சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

ஆண்டின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்சு ஓபன் ரெனிஸ் தொடர் பாரிசில் நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதி போட்டியில் 'நம்பர் - 1' வீராங்கனை பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின், தரவரிசையில் ஏழாவது இடத்தில் இருந்து செர்பியா வின் அன்னா இவானோவிச்சை எதிர்கொண்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பிரெஞ்சு ஓபனில் சாம்பியன் பட்டம் வென்று முழு ஆதிக்கம் செலுத்தி வரும் ஹெனின் இம்முறையும் ஆட்டத்தின் துவக்கத்திலிருந்தே அதிரடியாக விளையாடினார். இவரது புயல் வேக சர்வீஸ்களால் திக்குமுக்காடி போன இவானோவிச் பரிதாபமாக தோல்வி யடைந்தார். இரண்டாவது செட்டிலும் அசத்திய ஹெனின் தனது பிடியை கொஞ்சமும் தளர்த்தவில்லை. இறுதியில் 6 - 1, 6 - 2 என்ற நேர் செட்களில் கைப்பற்றி, பிரெஞ்சு ஓபனில் 'ஹாட்ரிக்' பட்டம் வென்றார். இது இவர் வெல்லும் ஆறாவது கிராண்ட்ஸ்லாம் மற்றும் நாலாவது பிரெஞ்சு ஓபன் பட்டமாகும். இங்கு 'ஹாட்ரிக்' பட்டம் வென்ற இரண்டாவது வீராங்கனை ஹெனின் தான். முன்னதாக அமெரிக்காவின் மோனிகா செலஸ் இச்சாதனையை செய்திருந்தார்.

பெண்கள் இரட்டையர் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியாவின் அலிசா மோலிக், இத்தாலியின் மாரா சான்டாச்சலோ ஜோடி, ஜப்பானின் அய் சுகியாமா, சுலோவேனியாவின் காத்ரினா ஸ்ரீபொட்னிக் ஜோடியை எதிர்கொண்டது. நடந்த இப்போட்டியில் அபாரமாக விளையாடிய மோலிக், சான்டாச்சலோ ஜோடி முதல் செட்டை கடும் போராட்டத்துக்கு பின் 7 - 6, என வென்றது. இரண்டாவது செட்டையும் இந்த ஜோடி 6 - 4, என கைப்பற்றி சாம்பியன் பட்டம் கைப்பற்றியது.

## ஆசியாவிடம் 'இருண்டது' ஆபிரிக்கா....!! ஆப்ரோ கிண்ணம்

போலக், ஜெயவர்த்னாவின் அசத்தல் துடுப்பாட்டம் மோர்கல்லின் பந்துவீச்சு என சில அம்சங்கள் தவிர ஆப்ரோ, ஆசிய தொடர் இந்திய ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை. அனுபவ படைக்கு முன்னர், கத்துக்குட்டி அணி வீரர்கள் சரண-டைவதை மீண்டும் ஒருமுறை காண முடிந்தது.

ஆபிரிக்க, ஆசிய அணிகள் மோதிய ஒரு நாள் தொடர் இந்தியாவில் நடந்தது. ஆசிய அணியில் தோனி, ஜெயவர்த்தன, ஜெயர்சூரியா, சேவக் உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் இடம்பிடித்திருந்தனர். ஆபிரிக்க அணியில் போலக் தவிர நட்சத்திரங்கள் யாவரும் இடம்பிடிக்கவில்லை. இந்திய அணியிலிருந்து கழட்டி விடப்பட்ட சேவக், ஹர்பஜனுக்கு இத்தொடர் தங்கள் திறமை நிரூபிக்க மீண்டும் ஒரு வாய்ப்பாக இருந்தது. இதை நன்கு உணர்ந்திருந்த சேவக் தனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மூன்று போட்டிகளிலும் அதிரடியாக பேட் செய்தார். இவர் தவிர யூசுப்பும் தனது பொறுப்பை உணர்ந்து ஆடினார். உலக கோப்பையில் 'லேட் பிக் அப்' ஆன ஜெயவர்த்தனாவின் ஓட்ட குவிப்பு தொடர்ந்தது. முதல் இரண்டு போட்டியில் அதிகம் பிரகாசிக்காத தோனி, மூன்றாவது போட்டியில் விஸ்வரூபம் எடுத்தார். இவர்கள் கூட்டணி, 'கிளிக்' ஆனதால் ஆசிய அணி அனைத்து போட்டிகளிலும் 300 ஓட்டங்களை கடந்தது. இதனால் பந்து வீச்சாளர்களின் பணி எளிதாக அமைந்தது. ஆசிப், ஜாகிர்கான், மோர்டசா என திறமையான வீரர்களால் பந்து வீச்சும் பலமாக இருந்தது. சுழலிலும் கலக்க ஹர்பஜன், ரபீக், ஜெயசூரியா இருந்தனர். சுழற்பந்து வீச்சை சமாளிக்க தடுமாறும் ஆபிரிக்க அணியினருக்கு இக்கூட்டணி பெரும் சவலாகவே அமைந்திருந்தது. பீல்டிங்கிலும் அணி ஓரளவு துடிப்புடன் செயல்பட்டது.

ஆபிரிக்க அணியை பொறுத்தவரை ஸ்மித், காலிஸ் என அனுபவ வீரர்கள் விலகியதால் ஏற்பட்ட பின்னடைவிலிருந்து முழுமையாக மீளவில்லை. போலக் பேட்ஸ்மேனாக மட்டுமே களமிறங்கினாலும், அனைவரையும் கவர்ந்தார். முதல் போட்டியில் துணிச்சலாக சதம் அடித்த இவர் வெற்றியின் விளிம்புக்கே கொண்டு சென்றார். அனுபவமில்லாத கென்ய, ஜிம்பாப்பே அணியை சேர்ந்த டாப் - ஆர்டர் பேட்ஸ்மேன்கள் தடுமாறினர்.

பீல்டிங், பவுலிங்கும் சுமார் ரகம் தான். மோர்கல் மட்டுமே ஆறுதலாக அமைந்தார். போலக் பந்து வீச இயலாததால் ஓட்ட குவிப்பை கட்டுப்படுத்த வழிதெரியாமல் திண்டாடினார். அணித்தலைவர் கெம்ப், சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான இந்திய ஆடுகளங்களில் திறமையான சுழற்பந்து வீச்சாளர் இல்லாமல் களமிறங்கியதும் பின்னடைவாக அமைந்தது. மிகவும் விறுவிறுப்பாக ரசிகர்களின் ஆர்வத்துக்கு தீனி போடும் என எதிர்பார்க்கப்பட்ட இத்தொடருக்கு நட்சத்திர வீரர்கள் விலகலால் ரசிகர்களிடம் ஆதரவு குறைந்தது. இதை சரி செய்ய இரு கண்டங்களிலிருந்து மிகச் சிறந்த வீரர்களை தேர்வு செய்வது மட்டுமே ஒரே வழி என்பதை இங்கு குறிப்பிடலாம்.

## தொடரை கைப்பற்றியது இங்கிலாந்து

மான்செஸ்டர் ரெஸ்ரின் கடைசி நாளில் பனேசர் சுழலில் கலக்க இங்கிலாந்து 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெஸ்ட் இன்டீசை வீழ்த்தி, தொடரை 2 - 0 என கைப்பற்றியது. சதம் கடந்து கடைசிவரை போராடிய வெஸ்ட் இன்டீஸ் வீரர் சந்தர்பாலின் ஆட்டம் வீணானது.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள வெஸ்ட் இன்டீஸ் நான்கு ரெஸ்ற், மூன்று ஒரு நாள் இரண்டு 'Twenty - 20' போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இலண்டனில் நடந்த முதல் ரெஸ்ற் 'சமன்' ஆனது. இரண்டாவது ரெஸ்ரில் இங்கிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 283 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று, தொடரில் 1 - 0 என முன்னிலை வகித்தது. இந்நிலையில் மூன்றாவது ரெஸ்ற் போட்டி மான்செஸ்டரில் நடந்தது. முதல் இன்னிஸ்சில் இங்கிலாந்து 370, வெஸ்ட் இன்டீஸ் 229 ஓட்டங்கள் எடுத்தன. இங்கிலாந்து இரண்டாவது இன்னிங்சில் 313 ஓட்டங்கள் எடுத்து, வெஸ்ட் இன்டீஸ்க்கு 455 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை நிர்ணயித்தது. நான்காவது நாள் ஆட்ட நேர முடிவில் வெஸ்ட் இன்டீஸ் ஐந்து விக்கெட் இழப்புக்கு 301 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சந்தர்பால் 81, ராம்தின் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

வெற்றிக்கு இன்னும் 154 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் வெஸ்ட் இன்டீஸ் ஐந்தாவது நாள் ஆட்டத்தை தொடர்ந்தது. ஆடுகளம் சுழலுக்கு ஒத்துழைக்கும் என்பதை நன்கறிந்த இங்கிலாந்து அணித்தலைவர் வான், பனேசரை முதல் ஓவர் வீச செய்தார். இவரது முடிவுக்கு நல்ல பயன் கிடைத்தது. ஆட்டத்தின் மூன்றாவது ஓவரில் பனேசரின் பந்தை ராம்தின் தடுத்து ஆட முயன்றார். ஆனால், அதுமுதல் ஸ்லிப்பில் இருந்த கோலிங்வுட் கையில் தஞ்சம் புக ராம்தின் (34) கதை முடிந்தது.

அடுத்து அறிமுக வீரர் சம்மி வந்தார். ஓரளவு நிதானமாக விளையாடிய இவர் 25 ஓட்டங்கள் குவித்து, பந்துவீசிய பனேசரிடமே 'கேட்ச்' கொடுத்து பெவிலியன் திரும்பினார். மறுமுனையில் தனிமனிதராக போராடிய சந்தர்பால் ரெஸ்ற் போட்டிகளில் 15வது சதம் கடந்தார். எட்வர்ட்ஸ், கோலிமோர் ஓட்ட கணக்கை துவக்கும் முன்னரே வெளியேற, வெஸ்ட் இன்டீஸ் அனைத்து விக்கெட்டையும் இழந்து 394 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இங்கிலாந்து 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று, நான்கு போட்டி கொண்ட தொடரை 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது. சந்தர்பால் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 116 ஓட்டங்கள் குவித்தார். இங்கிலாந்து சார்பில் அபாரமாக பந்துவீசி ஆறு விக்கெட் வீழ்த்திய பனேசர் ஆட்டநாயகன் விருதை தட்டி சென்றார். ஹார்மிசன் நாலு விக்கெட் வீழ்த்தினர். நான்காவது மற்றும் கடைசி ரெஸ்ற் வரும் 15ஆம் திகதி செஸ்டர் ஸ்டிரீட்டில் துவங்குகிறது.

## பதவியை புறக்கணித்தார் கிரஹாம் போர்டு

இரண்டு நாட்களுக்கு முன் இந்திய துடுப்பாட் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட தென்ஆபிரிக்காவின் கிரஹாம் போர்டு, பதவியை ஏற்க மறுப்பு தெரிவித்துள்ளார். கென்ட் கவுன்டி அணியின் இயக்குனராக உள்ள போர்டு, அதே பணியில் தொடர விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

உலக கோப்பை தொடர் முடிந்ததும் பயிற்சியாளர் பதவியில் இருந்து கிரெக் சாப்பல் விலகினார். இதையடுத்து புதிய பயிற்சியாளரை நியமிக்க, இந்திய துடுப்பாட் போர்டு தலைவர் சரத் பவார் தலைமையிலான ஏழு நபர் கமிட்டி அமைக்கப்பட்டது. பயிற்சியாளருக்கான போட்டியாளர்கள் பட்டியலில் இடம் பெற்ற தென்ஆபிரிக்காவின் கிரஹாம் போர்டு, இங்கிலாந்தின் ஜான் எம்புரி ஆகியோரிடம் ஏழு நபர் கமிட்டி பேச்சு வார்த்தை நடத்தியது. இறுதியில் கிரஹாம் போர்டு, இந்திய அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். இவர் அடுத்த ஒரு ஆண்டு காலத்துக்கு இப்பதவியில் நீடிப்பார் என துடுப்பாட் போர்டு அறிவித்தது. முன்னதாக கவுன்டியில் கென்ட் அணிக்கு இயக்குனராக, போர்டு பணியாற்றி வந்தார். இந்திய அணிக்கு பயிற்சியாளராக பொறுப்பேற்கும் பட்சத்தில், கென்ட் அணியின் இயக்குனர் பதவியிலிருந்து விலக வேண்டிய கட்டாயத்தில் இருந்தார் போர்டு.

இந்நிலையில், இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியை திடீரென உதறித் தள்ளியுள்ளார் கிரஹாம் போர்டு. இத்தகவலை கென்ட் கிளப் வெப்சைட் நேற்று வெளியிட்டது. அந்த வெப்சைட்டில் பேட்டி அளித்த கிரஹாம் போர்டு கூறுகையில், 'இந்திய அணிக்கு பயிற்சி விரும்புகிறேன். எனது முடிவு மிகவும் கஷ்டமானது தான். எனக்காகவும், எனது குடும்பத்துக்காகவும் நன்கு ஆலோசனை செய்து இந்த முடிவை எடுத்துள்ளேன்', என்றார் கென்ட் அணியில் அவரது பதவிக்காலம் 2008 செப்டம்பர் வரை உள்ளது.

கிரஹாம் போர்டின் முடிவு குறித்து இந்திய துடுப்பாட்ட போர்டு பொருளாளர் சீனிவாசன் கூறுகையில், 'இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியை ஏற்க, கிரஹாம் போர்டு மறுத்துள்ளார். கிரிக்கெட் போர்டின் செயற்குழு கூட்டம் டில்லியில் கூடுகிறது. கூட்டத்தில் புதிய பயிற்சியாளராக யாரை தேர்வு செய்வது பற்றி விவாதிக்கப்படும்', என்றார். கிரஹாம் போர்டு பயிற்சியாளர் பதவியை மறுத்ததற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. குறுகிய கால ஒப்பந்தம் (ஒரு ஆண்டு), மீடியாக்களில் பேச தடை, கிரிக்கெட் போர்டு நியமித்த சம்பளம் போன்றவை.



கிரஹாம் போர்டு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது, இவைகளை ஆலோசித்த கிரஹாம் போர்டு, பதவியை ஏற்க மறுத்ததாக தெரிகிறது.




**Raphael Maharaja**

Barrister, Solicitor & Notary Public

Tel: 416-847-7077 Fax: 416-847-7088

211 – 2425 Eglinton Avenue East, Scarborough, ON M1K 5G8

கனேடிய தமிழ் வழக்கறிஞர்



# அதிகரிக்கும் வட்டி வீதம்

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

## தொடர் -253

கடந்த ஒருவருடமாக கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதத்தில் எதுவிதமாற்றமும் இருக்கவில்லை. அதாவது 4.25% கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் காணப்பட்டது. இருந்தபோதிலும், கனடிய பிரதான வங்கி நிறுவனங்கள் அடமானக்கடனிற்குரிய வட்டிவீதத்தை கடந்த மாதங்களில் ஐந்து தடைவகள் அதிகரித்துள்ளன. கடைசியாக அதாவது June 13, 07ஆம் திகதி அதிகரிப்புடன் 5 வருடத்திற்குரிய அடமானக்கடன் வட்டி வீதம் (5 year closed mortgage) 7.69%. இந்த வட்டி வீதம் கடந்த ஐந்து வருடங்களில் ஆகக்கூடியதாகக் காணப்படுகிறது. இந்த கிழமையும் அடமானத்திற்குரிய வட்டிவீதத்தை அதிகரித்து, ஐந்து வருடத்திற்குரிய வட்டிவீதம் (5 Year Closed Mortgage) 7.69% இற்கு மேலாக காணப்படுகின்றது. இந்த வட்டி வீதம் பொதுவாகக் காட்டப்பட்டபோதிலும் இதிலிருந்து 1.5 வரையான கழிவைப்பெறலாம் என்பது விளம்பர வாசகர்கள் அறிந்தது. வட்டிவீதத்தின் அதிகரிப்பு வீட்டுச்சந்தையில் எந்தவித மாற்றதை ஏற்படுத்தும், இந்த கேள்வி கடந்த சில வருடங்களாக நுகர்வோர் மனதில் எழுந்து கொண்டே வருகின்றது. இந்நிலமை இப்படி இருக்கும் போதும் ரொறொன்ரோவில் வீடு விற்பது வாங்குவதை கணக்கில் வைத்திருக்கும் சபை (Toronto Real Estate Board) வைத்திருக்கும் கணக்கின்படி, 2007 ஆம் ஆண்டு மே மாதம் ஆகக்கூடிய வீடுகளை விற்று வாங்கப்பட்ட மாதமாக கணிப்பிட்டுள்ளது.



அதாவது மே 2007 இல் மொத்தமாக 11,146 வீடுகள் கைமாறியுள்ளன. இதுவரை 10,000 என்ற எண்ணிக்கையை எந்த ஒரு மாதத்திலும் தாண்டவில்லை. இத்துடன் வீட்டின் சராசரி விலையும் $382,787 ஆக அதிகரித்துள்ளது. கடந்த பத்து வருடங்களிற்கு மேலாக விலை அதிகரித்து வருகின்றபோதும், இதுவே அதிகூடியதாகக் காணப்படுகின்றது. மேலும் ஒரு வருடத்தில் 80,000 வரையான வீடுகள் விற்று வாங்கப்பட்டால், குறிப்பிட்ட ஆண்டு வீட்டுச்சந்தையில் ஒரு ஆரோக்கியமான வருடமாக எடுத்துக் கொள்ளப்படும். இந்நிகழ்வு 2004, 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டில் நடந்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை மே மாதக் கடைசிவரை 40,437 வீடுகள் கைமாறியுள்ளன. இதன்படி 2007ஆம் ஆண்டும் ஒரு சாதனை ஆண்டாக மிளிரும் என்பதனை இப்பவே ஊகிக்கக் கூடியதாக உள்ளது. இந்தக்கணக்குகள் இரண்டாம் தடவை அல்லது அதற்கு பிற்பாடு விற்று வாங்குவதே (Resales) இத்துடன் இதனைவிட புதிய வீடுகளும் விற்கப்படுகின்றன. அந்த கணக்கு இதில் கொள்ளவில்லை.

விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பும் விலையின் அதிகரிப்பும் தொடர்வதால் பொருளாதார நிபுணர்களின் எதிர்வு கூறலின்படி, மத்திய வங்கியின் ஆளுனர் டேவிட் டொட்ஜ் இன் மற்றைய சந்திப்பு யூலை 10, 2007 நடைபெறவுள்ளது. இச்சந்திப்பில் வட்டிவீதம் 1/4% இனால் அதிகரிக்கலாம். அத்துடன் இந்த வருடத்திற்குள் இன்னுமொரு 1/4% அதிகரிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு நடந்தால் வீட்டுச் சந்தையில் எவ்விதமாற்றம் ஏற்படலாம்? ஒருவித மந்த நிலைமை ஏற்படலாம் போலத் தோன்றினாலும் உதாரணமாக கடந்த கிழமை புதிய கொண்டோமெனியம் தொகுதி ஒன்று (Condominium) வீட்டுச்சந்தைக்கு விற்க வந்ததைப் பற்றியும் பார்க்கலாம்.

Scarborough Centre இற்கு அண்மையில் புதிய Condo. Project கடந்த கிழமை விற்பனைக்கு வந்தது. இந்த Project பொதுவாக விளம்பரப்படுத்தவில்லை. சில குறிப்பிட்ட வீட்டு வியாபார முகவர் நிலையங்களிற்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டது. இதில் பத்து நிறுவனங்கள் மட்டும் அழைக்கப்பட்டு இருந்தன. மொத்தமாக 360 அலகுகள் (Units) மட்டுமே விற்பனைக்கு இருந்தன. ஆனால் அன்று 600 இற்கு மேற்பட்ட வாங்குபவர்கள் வந்திருந்தார்கள். ஒரு இரவிலே எல்லாம் விற்று முடிந்து விட்டது. இந்த உதாரணம் எவ்வாறான நிலமையைக் காட்டுகின்றது.

ஒரு பக்கத்தில் வட்டிவீதம் அதிகரிக்கப்படுகின்றது. விலை அதிகரிக்கின்றது. விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. ரொறொன்ரோ மாநகரத்திற்கு குடிபுகுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. மறுபுறத்தில் 25 வருடத்திலிருந்த Amortization 40 வருடம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. வட்டி மட்டுமான மோட்கேஜ், முதலீடற்ற மோட்கேஜ், 20% உடனான காப்புறுதியற்ற மோட்கேஜ் (Conventional Mortgage) போன்ற புதிதுபுதிதான வீட்டு வியாபாரத்தை ஊக்குவிப்பதற்கான உத்திகள் கொண்டு வரப்படுகின்றன.

மேலும் இதுவரை வியாபாரக்கட்டிடங்களிற்கான மோட்கேஜ் 15 வருடங்கள் அல்லது 20 வருடங்களிற்கே Amortization கொடுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இந்த Amortization Periodஐ 30 வருடங்களாக அதிகரிக்கப்படும்போல் தோன்றுகின்றது. இந்த ஒன்றிற்கொன்று முரண்பாடான நிகழ்வுகள், வீட்டுச்சந்தையில் எவ்வித மாற்றத்தை ஏற்படுத்தும்?.




புதிய, அனுபவமிக்க வீட்டுப்பிரதிநிதிகள் எமது நிறுவனத்தில் சேர்ந்து கொள்ள அழையுங்கள்

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**

145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated

**Raja M. Mahendran,** P. Eng.

(Broker / Owner)

**House for sale**

- Neilson & Sheppard, 3 bedroom detached house with finished basement . Asking price $243,800
- Morningside & Old Finch, 3 bedroom detached house with finished basement. 3 washroom, Asking Only $249, 900

**Condo for sale** • Markham & Eglinton, 2 bedroom condo. Asking Only $127,000.

**Nantha Aiyadurai**

**Cell: 613 850 9931**

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# தந்தை புகழ்

பல்லவி:

தந்தைபுகழ் பாடுங்கடி அவர்சேவை போற்றுங்கடி
முந்தைவினைப் பயனமைந்த முத்துக்களே தந்தையடி

அனுபல்லவி:

இயந்திரமாய் உழைத்துவரும் இன்னுயிரைப் பாடுங்கடி
இம்மையிலே நாம்காணும் தெய்வமன்றோ தந்தையடி

சரணம்

உயர்ந்து நாங்கள் வாழவேண்டி ஓடிஉழைப்பார் - தினம்
தெரிந்துநல்ல உணவுப்பண்டம் தேடிக்குவிப்பார்
சிங்கம்போல கர்சிக்கும் சீவனிவரடி - ஆனால்
பங்கம் ஏதுமில்லாத பாவியாளடி

அம்மாவென்றே நாயகியை ஆசையிலழைப்பார் - அவாவும்
அப்பா என்றே அனுதினமும் அன்புடன்குழைவா
இல்லறத்தில் இனிதுறத்தான் நாங்கள் வாழவே - என்றும்
இராப்பகலாய் உழைத்திடுவார் சோம்பலின்றியே.

கத்திக் கத்திப் பிள்ளைகளைக் கற்றிடவைப்பார் - சபையில்
முந்தியிருத்தும் முனைப்பினிலே கண்ணாயிருப்பார்
செந்தமிழோ இலக்கியங்கள் நாங்கள் பயின்றிட - என்றும்
முந்திநிற்கும் முதற்குருவார் தந்தை தானடி.



ஞானகணேசன்

# முடிவற்ற அலைச்சல்

இந்த வழியால்தானே
மாசிமாதம்
உறைபனியில்
நடந்து சென்றேன்

கொட்டுகின்ற பனித்தூளில்
பாதத்தைத்
தூக்கித் தூக்கி வைத்து
எட்டி எட்டி நடந்தபோது
முழங்கால்வரை புதைந்தன
என்னை இயக்குகின்ற
ஆயுள் சக்கரம்

குளிர்சாதன அறையாக
வீசுகின்ற தென்றலைத் தழுவிய
என் உடற் கலங்கள்
நித்திரையால்
விழித்தெழுகின்றன
இந்த வைகாசி வசந்தத்தில்

நரம்புகளைத் தொங்கவிட்டு
செத்துநின்ற மரங்கள் எல்லாம்
பச்சைப் பசேலென்ற
பசுந்தளிர்க் கரங்களால்
இன்று
சாமரை வீசுகின்றன

உச்சாரங் கொப்புக் கூட்டம்
ஆளையாள் தடவிச்
சுகம் விசாரிக்கின்றன

ஆனையிறவு உப்பளமாகக் கிடந்த
இந்தப் பெரு வெளியில்



மஞ்சள் நீலம் றோசாவென
எத்தனை வகை
மலர்கள்?

மூவேந்தரின்
வெண்கொற்றக் குடைகளை
வட துருவத்தின்மீது
வீசி எறிந்தது யார்?

காபனை வடிகட்டுகின்ற
இந்தச் சோலைக்கு
என்ன கைம்மாறு
என்னால் செய்ய முடியும்?

இந்தப் பரந்தவெளியின்
பசுமைக்கோலம்
காய்ந்து சருகாகி
என் இதயத்தை
நிறைத்திருக்கின்ற
துயரப் படிமங்களை
மீண்டும்
பச்சையாக்குகின்றனவே

தாம் கால்பதித்த தாயை
உறைகுளிர் கொல்லும்போதும்
பொறுமையுடன் அடங்கிக் கிடந்து
மீண்டும் அதன்மீது
பச்சை ஓலைப்பாயை
நீட்டி விரிக்கும்
ஓர் உணர்வுப் பிறவிகள்.

இந்தப் புல்லில்
பூவில் செடி கொடியில்
உயர்ந்து நிற்கும் மரங்களில்

இத்தனை பொறுமை
இத்தனை பொறுமை!



முத்துராஜா

# திருவிணுவில்

பண்: பஞ்சமம்

அணுவாவார் அணுவுக்கும் அணுவாகி அரிதாவார்
மணியாவார் மலையாவார் வானாகிப் பெரிதாவார்
கணியாவார் கணினிக்கும் அடங்காத கணக்காவார்
இணுவிற்பேர் ஊர்தன்னில் எழுந்தருளும் இறைதாமே.

அணியாகும் இணையடிகள் அழகாகும் அவர்வடிவம்
அணியாகும் அவர்நமச்சி வாயவெனும் அருநாமம்
அணியாகும் திருநீறு அன்பார்ந்த வழிபாடு
துணையாவர் எப்பொழுதும் இணுவில்வாழ் தூமணியே.

மணியான மங்கையினை இடப்பாகம் வைத்துள்ளார்
அணியாகச் செஞ்சடையில் நீர்நிலவை அணிந்துள்ளார்
துணிவான சூரர்களைச் சிரிப்பாலே சுட்டெரித்தார்
இணுவிற்பேர் ஊர்தன்னில் எழுந்தருளும் இறைதாமே.

தணியாத கடல்நஞ்சைத் தாமுண்டு வானோரின்
இணையில்லா இறையாக என்றென்றும் திகழ்கின்றார்
பணிசெய்து புவிவாழும் பத்தர்க்கும் பதியாவார்
இணுவிற்பேர் ஊர்தன்னில் எழுந்தருளும் இறைதாமே.

பணியாத வேடுவரும் பதமாகப் பார்த்தருள்வார்
தணியாத தாகங்கள் தணிந்திடவும் வழிசெய்வார்
துணியாத முயற்சிகளைத் துணிந்திடவும் துணைநிற்பார்
இணுவிற்பேர் ஊர்தன்னில் எழுந்தருளும் இறைதாமே.

வெங்காயம் விளைத்திடுவார் மிகுசெல்வம் குவித்திடுவார்
பங்கான கோண்டாவிற் பத்தர்க்கும் பணிசெய்வார்
வெங்காய நோய்மாற்றி அங்காயம் ஆக்கிடுவார்
மங்காத புகழ்தாங்கும் இணுவில்வாழ் மாமணியே.

மான்மழுவை ஏந்துபவர் மன்னுயிர்கள் தாங்குபவர்
வான்வெளியில் நீந்துபவர் மாசிலருந் தொண்டர்மனம்
தேனமுதாய் ஊறுபவர் திருவருளாய் மாறுபவர்
வான்புகழரர் மன்னிணுவில் வணங்கிவரும் ஆண்டவரே.

அடிமுடியை மாலயனார் தேடிடவும் மறைந்திருந்தார்
வடிவுறவே அறுபத்து மூவரிலும் நிறைந்திருந்தார்
படிமுறையாய்ப் பக்குவத்தை அடைந்தவர்க்குப் படியளப்பார்
கடுமுழைப்பூர் இணுவிலதிற் களித்தருளும் கடவுளரே.

இசைவாணர் வீரமணி இயற்றமிழர் திருமுருகன்
திசைபோற்றும் கல்விகலை திருவாளர் யாவரையும்
இசைவாகப் பெற்றெடுத்த இணுவிலிலே வீற்றிருந்து
விசாலாட்சி அம்மையொடும் விசுவேசர் அருள்வாரே.

ஆண்டவர்கள் முன்னாளில் அருந்தமிழர் இந்நாளில்
நீண்டநெடுங் காலமதாய் நீதியற்றார் சூழ்ச்சிகளால்
தூண்டிலிலே தொங்குகின்ற மீன்களைப்போல் துடிக்கின்றார்
மீண்டவர்கள் மேன்மைபெற விசுவேசர் அருள்வாரே.

இக்கோயில் இணுவிற் பதியில் பிரதான வீதியில் மத்திய கல்லூரிக்குக் கிழக்காகவுள்ளது. சிவத்திரு சின்னத்தம்பி என்பவரால் 1912ஆம் ஆண்டு அமைக்கப்பெற்றது. இறைவர்: விசுவேசுவரர். இறைவி: விசாலாட்சி.

மற்றுமொரு கோயில் இணுவிலூரின் தென்திழக்கில் கோண்டாவிற் பதியின் வடமேல் திசையை அண்டி உள்ளது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுப்பிரமணியம் சந்நியாசியாரால் அமைக்கப்பட்டது. இறைவர்: விசுவநாதர். இறைவி: விசாலாட்சி.



கவிஞர் வி. கந்தவனம்


## வருடாந்த பண்ணிசை - பேச்சுப் போட்டிகள் - 2007

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா) தன் அங்கத்துவர்கள் அவர்களின் வாரிசுகள் மத்தியில் நடத்தும் வருடாந்தப் போட்டிகள்

- **பண்ணிசை**
- **தமிழ் சொல்வதெழுதல்**
- **ஆங்கில சொல்வதெழுதல்**
- **கணிதம்**
- **பேச்சு**

இடம் - St. Stephen's Pressbyterian Church,
3817 Lawrence Ave. East, Scarborough

காலம் - யூலை 07ஆம் திகதி, சனிக்கிழமை காலை 8:00 மணி தொடக்கம்

தொடர்புகளுக்கு - 416.721.9709 416.431.1060 416.283.1439
905.472.4194 416.283.5265

நகைச்சுவைத் தொடர் 171

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் தவணைப்பரீட்சைக்கு படிக்கும் மாணவரைப்போல் குழம்பிப்போயிருந்தனர். இருந்த வீடியோக்கொப்பிகள் பல தடவைகள் பாத்தாச்சு. உலகர் வரும்போது புது நாடகக்கொப்பிகளுடன் வருவார்.



உலகர் எப்ப வருவாரோ... எப்ப வருவாரோ... என இவர்கள் வீட்டில் பாத்திருக்க.. உலகர் ரொறொன்ரோ மாநகரிலுள்ள அத்தனை கோயில்களின் கொடியேற்றம், தேர், தீர்த்தம் தவறவிடமாட்டார். அதுவும் வேலைநாட்களில் வந்துவிட்டால்.. ? ரூபனிடம் உதவி பெறமுடியாது.



உலகர் எப்போ நாலு முழத்துடன் திரியலாம் என்று எதிர்பாத்திருந்த காலத்தை வீணாக்க விரும்பவில்லை. நடந்தோ பஸ்சிலோ போனால் திரும்பி வருவதற்கு பிரச்சினையில்லை.. யாராவது ஏற்றிக்கொண்டு வந்து விடுவார்கள்.



வழமையான உலகரின் கோஸ்ரி செல்லம்மா, அன்னம்மா, ராசம்மாக்கா திட்டமிட்டபடி கவிழ்த்து விட்டார்கள். ஏதோ சாட்டுச்சொல்லி தாங்கள் கோவிலுக்கு வரவில்லை என்றுவிட்டனர்.

கண்டதே காட்சி கொண்டதே கோலம் இதுதான் பலரின் வாழ்க்கைத்திட்டம். எட! வீணா நேரம்போகுது வீட்டை நிண்டா அந்த சீரியல் கொப்பி பாத்து முடிச்சிருக்கலாம் என்று கலைநிகழ்ச்சிகளுக்கும் கோவில்களுக்கும் வந்த பக்தகோடிகள் பலரின் அங்கலாய்ப்பு பலரின் முணுமுணுப்பு உலகரின் காதில் விழுந்திருக்கிறது.

உலகண்ணை கோவிலுக்குப்போட்டு வரேக்கை அந்த வீடியோக் கொப்பி புருசனை.. வீட்டைவிட்டு... கலைக்கிறது.. பாத்திட்டம்.. அடுத்த கொப்பி.. அதிலை.. புருசன்ரை பழைய சினேகிதி பொலிஸிலை போய் பிணை எடுக்கிறாவாம். மீனா ராத்திரி எனக்கு அடிச்சு.. சொன்னவள். அந்தக்.. கொப்பியொண்டு..



கிரகாம் பெல் கஸ்டப்பட்டு கண்டுபிடித்த ரெலிபோன் கதையளப்பதுக்குத் தானென்று தெரிந்தால் எவ்வளவு கவலைப்படுவார்? உலகருக்கு உரு வந்தது போலிருந்தது. கலை நிகழ்ச்சிகள் கோயில் குளம்போவது போறிங்.. சொந்தக்காரரை வெட்டிக்கொத்துறது தெரியாது.

செக்கண்ட் புளோர் செல்லம்மாவின் பெறாமகனை கொழும்பில் பொலிஸ் பிடித்து இதுவரையில் ஆள் எங்கே யென்று தெரியாது. அதை விடுத்து சீரியலில் சிறை வைக்கப்பட்டவனுக்காக அழும் உலகம்.

தமிழ் விழாக்கள், இறந்தோருக்கான அனுதாபக் கூட்டங்களுக்குக் கூடப்போகாமல் சீரியல் நாடகங்கள் எம்மை சிக்கென பிடித்துள்ளன.

பட்டிக்கு மாடு வருவதுபோல் பொழுது சாயத்தான் திரும்புவார். உலகர் புறப்படும்போதே ஒருமுடிவோடுதான் புறப்பட்டார்.



உலகரின் இருமலில் தெரியும் வீட்டுக்கு கிட்ட வந்துவிட்டாரா என்று உலகண்ணை கொப்பியெடுத் தனீங்களேயென்று அன்னம்மாவும் செல்லம்மாவும் கேட்க உலகர் வீடியோவில் ஓடிக்கொண்டிருக்கும் நாடகத்தை நிப்பாட்டிவிட்டு ரி.வி தமிழ் நிகழ்ச்சிக்கு மாற்ற 'வெல்க தமிழ்' நிகழ்ச்சி ஓடிக்கொண்டிருந்தது. 'வெல்க தமிழ்" அதாலை தமிழ் கடையள் பின்நேரம் பூட்டு.

---

## குறமகள் - நூல் வெளியீடு

திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களால் ஆய்வு செய்யப்பட்ட

## யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வி - ஓர் ஆய்வு

எனும் நூல் தென் ஆசியப்பெண்கள் நிலையத்தின் அனுசரணையுடன் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இடம்:** ஸ்காபறோ நகரசபை மண்டபம்
**Scarborough Civic Centre, 150 Borough Drive**
**காலம்:** ஜுன் 16, 2007, சனிக்கிழமை **நேரம்:** மாலை 5:30 மணி
**தொலைபேசி இலக்கம்:** 416.536.8445 / 647.207.8445

---

## சாளரம்

நுழைவு இலவசம்!

குடும்பத்துடன் வந்து கண்டு களியுங்கள்!
அருமையான கலை நிகழ்ச்சிகள்!!
நாட்டிய நாடகம்!
Little Empire துள்ளிசை!

காலம்: JUNE 16, 2007
நேரம்: மாலை 3:00 ---6:00

இடம்: METRO SQUARE
55 JOHN STREET
(BETWEEN METRO HALL & ROY THOMPSON HALL)
(St.Andrew Subway Station)

வாருங்கள் வந்து உண்டு களியுங்கள்!
தொடர்புகளுக்கு: வசந்தம்- 416-324-4185




# For All Your Real Estate Needs

## Lucky Draw for New Car Will be on August ,2007

**Buy or Sell through us before August 15, 2007 and win a New Car****




- Upgraded Penthouse Unit
- Close To School And Shops
- Huge Bedroom
- 2 Level
- Beautiful Roof Top Garden.




- Brand New Home
- Very Bright Home
- Natural Oak Strip Hrdwd Floor
- Beautiful Madison Home
- Demanded "Walnut Model"




- Location!
- Subway, Mall, Hwy's
- 9' Ceiling
- Close to All Amenities
- Walk Out Patio




- Excellent Location
- Single door entry
- Close To All Amenities
- Excellent View
- Quite Neibourhood



"Friendly & Professional"

Jayanthi Sritharan
Sales Representative
416.918.5872
Email:sritharanj@rogers.com

HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
Tel: 416.321.6969 Fax: 416.321.6963

HOMELIFE HIGHER STANDARDS

This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated


Niru
Niru
நிரு
பிராண்ட்
Niru BRAND ®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE
Niru BRAND

## கடந்த இதழ் தொடர்ச்சி

(175) மூளை பலப்பட ஞாபக சக்தி கூட - மூளை பலப்படவும் தெளிவாக செயற்படவும், ஞாபகசக்தி கூடவும் தாதுப்பொருட்களான ஐயோடின் சத்தும், மன்கனீஸ் சத்தும் அதிகம் உடம்பிற்கு தேவை. இவை வெங்காயம், கடலை, அப்பிள், பாதாம்பருப்பு, தக்காளி, உருளைக் கிழங்கு, தேங்காய், வெண்டைக்காய் ஆகியவற்றில் அதிகம் உண்டு. எனவே இவற்றை உணவில் சேர்த்துக்கொண்டால் மூளை வளர்ச்சிபெற்று ஞாபகசக்தி கூடும்.

(176) வயிற்றுவலிக்கு - அடி வயிற்றில் திடீரென வலி ஏற்படின் ஒரு தேக்கரண்டி தேனை சற்று சூடான நீரில் விட்டு ஒரு கிளாஸ் குடிக்கக்கொடுத்தால் வலி குறையும் தூக்கம் வரும். ஓமம், மிளகு, உப்பு இவற்றை சம அளவு எடுத்து இடித்து காலையில் ஒரு தேக்கரண்டி குடித்து வெந்நீர் குடித்தால் வயிற்று வலிவருவது நின்றுவிடும். வெள்ளை முள்ளங்கியை துவைத்து சாறு எடுத்து ஒரு கிளாஸ் குடித்தால் வயிற்றுவலி நின்றுவிடும். வெகுநாட்பட்ட வயிற்று வலிக்கு வில்வத்தளிர் ஊறிய நீரை காலையில் குடித்து வந்தால் விரைவில் குணமாகிவிடும். வயிற்றுவலி குடலில் புண் இருப்பதனால் ஏற்படலாம் எனவே காரமான உணவு, புகைப்பிடித்தல் மதுபானம் கொழுப்பான உணவு இவற்றை தவிர்க்கவேண்டும்.

பவளமல்லி வேர்ப்பட்டை, ஆவரம் செடியின்வேர்ப்பட்டை, ஆலம்விழுதின் பட்டை இவற்றை வெய்யிலில் உலர்த்தி இடித்து சூரணம் செய்து அந்தச்சூரணத்தில் இரண்டு தேக்கரண்டி பசுப்பாலில் காச்சி பனங்கற்கண்டுசேர்த்து தினம் மூன்றுவேளை குடித்தால் எந்த நாட்பட்ட வயிற்றுவலியும் குணமாகிவிடும். கொத்தமல்லியை வறுத்து நீரில் நான்கு மணிநேரம் ஊறவிட்டு அதில் ஒரு அவுன்ஸ் குடித்தால் வயிற்றுவலி குணமாகும். மாதுளம் பழத்தோலை காயவைத்து இடித்து அந்த தூளில் சிறிதளவு எடுத்து சர்க்கரையுடன் காலை, மாலை வெந்நீருடன் குடித்து வந்தால் வயிறு இரைச்சல், வலி குணமாகும்.



# பரம்பரை வீட்டு வைத்தியம்


டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D
Holistic Practitioner (Canada)
Nutrition & Fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை -
Tel. - 416.291.3022
E.Mail-DRVPS@Hotmail.com


(177) வயிற்றுப்புண்ணுக்கு - வயிற்றில் புண் இருந்தால் வாயிலும் புண் ஏற்படலாம். இதற்கு கறுப்பு திராட்சை பழம் சிறந்தது. இதன் ரசத்தை தினம் குடித்தால் இந்தப்புண்கள் குணமாகிவிடும். காரம் தவிர்க்க வேண்டும். அமைதியாக ஓய்வெடுக்க வேண்டும். நன்கு கரையப்பழுக்காத வாழைப்பழம் வயிற்றுப்புண்ணை குணமாக்க வல்லது எனவே தினம் உணவுக்குப்பின் வாழைப்பழம் சாப்பிடவும். 'கரற்'றை ஆவியில் அவித்து திரவம் செய்து தினம் மோருடன் குடித்தால் வயிற்றுப்புண் குணமாகும்.

(178) வயிற்றுக்கடுப்புக்கு - சிலருக்கு அதிக சூட்டினால் வயிற்றுக்கடுப்பு ஏற்படும். இதற்கு வெந்தயத்தை மோரில் அவித்துக்குடித்தால் வயிற்றுக்கடுப்பு குணமாகும். வாழைப்பழத்தை நறுக்கி நல்லெண்ணையில் தோய்த்து சாப்பிட்டு வந்தால் வயிற்றுக்கடுப்பு குணமாகும். மிளகாய் தவிர்கவேண்டும். மாங்கொடடைபருப்பை உலர்த்தி தூள் செய்து அந்த தூளில் ஒரு தேக்கரண்டி எடுத்து தேனுடன் காலை, மாலை சாப்பிட்டு வந்தால் வயிற்று கடுப்பு குணமாகும். கசகசாவை அரைத்து பாலில் கலக்கி சிறிதளவு குடித்தால் வயிற்று கடுப்பு குணமாகும். சோற்றுக்கற்றாளை சோற்றை அரைத்து விளக்கெண்ணையில் ஊறவிட்டுக்காய்ச்சி வடித்து எடுத்து தினம் ஒரு தேக்கரண்டி குடித்துவந்தால் நாட்பட்ட அடிவயிற்று வலி மலச்சிக்கல் குணமாகி மேனியும் பளபளப்பாகும்.

(179) வயிற்றுப்போக்குக்கு - வயிற்றுப்போக்கால் உடல்நீர் வற்றி ஆபத்தான நிலை உருவாகலாம். இதற்கு புழுங்கல் அரிசி கஞ்சியில் சிறிதளவு உப்பு சேர்த்து குடித்தால் குணமாகும். இளநீர் குடிப்பதால் நீர் வற்றுவது குணமாகும். நெல்லுப்பொரியை அவித்து அந்த நீரில் சிறிதளவு உப்பும் அரை தேசிப்பழச்சாறும் விட்டு குடித்தால் உடம்பில் நீர்வற்றுவது குணமாகும்.

(180) வயிற்றில் வாய்வு நீங்க - விளா மரத்தின் தளிர் இலையை கசாயம் வைத்து சர்க்கரையுடன் குடிக்க வயிற்றில் உள்ள வாய்வு குணமாகி நல்ல பசி எடுக்கும். வயிற்றில் கடும் உப்பிசம் இருந்தால் 'ரெபன்ரைன் ஓயில்' (Terpentine Oil) என்னும் எண்ணெயை வயிற்றில் தடவி வயிற்றிற்கு வெந்நீர் ஒற்றடம் கொடுக்க உப்பிசம் குணமாகும். ஓமத்தை வறுத்து நீர்விட்டு காய்ச்சி அத்துடன் சிறிதளவு பால் விட்டு சர்க்கரையுடன் குடித்தால். வயிற்று உப்பிசம் குணமாகும். சுக்குபொடியை சிறிது பூண்டுச்சாற்றுடன் சேர்த்து காலை,மாசை தின்றால் வயிற்று உப்பிசம் குணமாகும். வேலிப்பருத்தி இலைசசாறு அரைக்கரண்டி, மிளகுதூள் அரைக்கரண்டி, ஒரு கரண்டி தேனுடன் சேர்த்து குடித்தால் வயிற்றுப்பொருமல் குணமாகும். ஜாதிக்காய், ஏலம், கற்பூரம், கிராம்பு இவற்றை சம அளவு எடுத்து சகலதையும் தூள்செய்து வைத்துக்கொண்டு அந்தச்சூரணத்தில் ஒருகரண்டி தேனுடன் சேர்த்து காலை, மாலை தின்றால் குன்மம் குணமாகும். உப்பிசம் நீங்கும். கொத்தமல்லியை வறுத்து அத்துடன் கால்பங்கு சோம்பு சேர்த்து இடித்து இதில் ஒரு கரண்டி தூளை பாலில் கலக்கி சர்க்கரையுடன் காலை, மாலை குடித்தால் வயிற்று உப்பிசம் குணமாகும்.

(181) வலிப்புக்கு - பொன்னாவரசு விதை ஒரு கிராம் எடுத்து அதை பசுப்பாலில் அரைத்து மணிக்கொரு முறை ஒரு கரண்டி கொடுத்தால் வலிப்பு குணமாகும் மீண்டும் வராது. பால் கொடுக்கும் தாய் இந்த மருந்தை தினம் மூன்றுவேளை குடித்தால் குழந்தைக்கு மீண்டும் வலிப்பு வராது.

(182) வயிறு தொப்பை நீங்க - இது பெரும்பாலும் உடல் உழைப்பு இல்லாது ஒரே இடத்தில் இருந்து வேலை செய்பவர்களுக்கும், உடற்பயிற்சி இன்மையாலும் வரும். உணவுக்கட்டுப்பாடும் ஓரளவு தேவை. வாழைத்தண்டு கறிவைத்து தினமும் சிலநாட்கள் சாப்பிட்டு வந்தால் வயிறு தொப்பை குறையும். இஞ்சிச்சாற்றை காய்ச்சி அதற்குள் சம அளவு தேன்விட்டு காய்ச்சி வற்றியதும் இறக்கி பத்திரப்படுத்தவும். இதில் ஒரு தேக்கரண்டி காலையிலும் ஒரு தேக்கரண்டி மாலையிலும் சாப்பாட்டிற்கு முன் குடித்து வெந்நீர் குடிக்கவும். இப்படி ஒரு மண்டலம் - 40 நாட்கள் குடித்து வந்தால் தொந்தி வடிந்து விடும். கடுக்காய் சூரணமும், சுக்கு சூரணமும் சம அளவு சேர்த்து காலையும் மாலையும் சாப்பாட்டிற்கு முன் ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வெந்நீர் குடித்தாலும் தொந்தி விரைவில் குறையும்.

(183) வாய் நாற்றம் நீங்க - வாய் நாற்றம் வருவதற்கு பல காரணங்கள் உண்டு, பல் சொத்தை, வாய் அவிச்சல், நன்கு பல் துலக்காமை, வயிற்றில் அஜீரணம் இப்படிப்பல காரணங்களால் வாய் நாற்றம் ஏற்படும் இதன் காரணத்தை அறிந்து அதற்கு தகுந்த மருத்துவம் செய்ய வேண்டும். உடன் வாய்நாற்றத்தை நீக்க கராம்பை மென்று தின்றால் தற்காலிகமாக வாய் நாற்றம் நீங்கும். ஆனால் மீண்டும் வராமலிருக்க காரணம் அறிந்து தகுந்த சிகிச்சை பெறவேண்டும். வாய் நாற்றம் குணமாக சிறிதளவு படிகாரத்தை நீர்விட்டு காய்ச்சி ஆறவைத்து தினம் மூன்றுவேளை வாய்கொப்பளித்து வந்தால் வாய்நாற்றம் குணமாகும். பற்களும் கெட்டியாகிவிடும். கடுக்காயை சுட்டு அரைத்து அந்தக்கரியால் பல் துலக்கி வந்தால் வாய்நாற்றம் குணமாகும். பற்சொத்தையும் நீங்கும்.






KV TRUCK DRIVING CENTER

6 கிழமைகளில் நீங்களும் கனரக வாகன சாரதி ஆகலாம்

A C D Z வாகன சாரதி அனுமதி பத்திரங்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும்.
ஒவ்வொருவருக்கும் தனித்தனியான பயிற்சிகள் வழங்கப்படும்.
உங்கள் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படும்.
பயிற்சியின் முடிவில் உடனடி வேலைவாய்ப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

பயிற்சி முழுவதற்குமான கட்டணம் $1699.00 மட்டுமே

CANADA & USA
பெருந்தெருக்களில் பயிற்சி வழங்கப்படும்

* 365 LEARNING PERMIT, * LOG BOOKS,
* AIR BREAK (Z) * DANGEROUS GOODS,
* BORDER CROSSING

WELFARE & UNEMPLOYMENT
இல் இருப்பவர்களுக்கு இலவச பயிற்சி வழங்கப்படும்.

உங்கள் வசதிக்கேற்ப வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சி வழங்கப்படும்.

அழையுங்கள்: கிருபா
647-274-0300 / 647-428-6988
Fax: 647-428-6989
visit: www.kvtrucking.com
805 MIDDLEFIELD ROAD, UNIT - 202, SCARBOROUGH, ONTARIO.
(Middlefield & McNicoll)



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

ஸ்காபரோவில் 15 வருடத்திற்கு மேலான சேவை

இப்பொழுது றிச்மொண்ட்ஹில்லில்

# NTE AUTO INC.

New Trade Engineering

MS7 AUTO



346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575

# Quality Work... For Less $$$

## "Fully Licensed Class "A" Mechanics on Duty"

### Repairs To All Makes & Models

New Location

- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- BMW service & Maintenance
- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs* Summer
- Mechanical Safety Inspection & Certification
- FREE ESTIMATES




தொடர்புகளுக்கு: சிவபாலன்

## Move in Special

### Oil Change

with this Coupon
No cash Value
one coupon per purchase
Expire on Dec. 31, 2007

From $19.00

NTE AUTO INC. New Trade Engineering
MS7 AUTO
905-770-2575
346 Newkirk Road, Unit 16, Richmond Hill

## Move in Special

### Brake Service

with this Coupon
No cash Value
one coupon per purchase
Expire on Dec. 31, 2007

15%OFF

NTE AUTO INC. New Trade Engineering
MS7 AUTO.
905-770-2575
346 Newkirk Road, Unit 16, Richmond Hill

## Move in Special

### A/C Service

Reg. Price from $45.00

with this Coupon
No cash Value
one coupon per purchase
Expire on Dec. 31, 2007

$35.00

NTE AUTO INC. New Trade Engineering
MS7 AUTO
905-770-2575
346 Newkirk Road, Unit 16, Richmond Hill

# தென்னகத்தின் நுழைவாயில் - சென்னை



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்-17

உலகிலேயே மிக நீண்ட, பரந்த இரண்டாவது பெரிய கடற்கரை, வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள், பசுமை கொழிக்கும் நவீன பூங்காக்கள், வானளாவும் கட்டிடங்கள்... எனக் காட்சிக்கினிய இடங்கள் நிறைந்தது தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னை நகர்.

சென்னையின் அழகே அதன் கடற்கரைகள் தான். மெரினா பீச், பெசன்ட் நகர் பீச் இரண்டும் மிக முக்கியமானவை. கடந்த ஐந்து வருடங்களாகச் சென்னையை அழகுபடுத்தும் சிங்காரச் சென்னை திட்டத்தின் கீழ் மெரினா மிக நவீனமாக்கப்பட்டுள்ளது. அழுக்கற்ற வெண் மணற் பரப்பு, வண்ணப் பூங்காக்கள், தலைவர்களின் சிலைகள் என மெரினா இன்று சென்னைவாசிகளுக்கு மிக முக்கியமான பொழுதுபோக்கும் இடம். வெண் மணற் பரப்பில் அமர்ந்து, முன்னால் பரந்து கிடக்கும் கடலை ரசித்தவாறே, வீசிடும் தென்றலில் திளைத்து, இசையோடு பொழுதுபோக்கி மகிழ அருமையான திறந்த வெளி மெரினா. கடற்கரையை ஒட்டி, பூந்தோட்டத்தைத் தழுவியவாறே செல்லும் நெடுஞ்சாலையில் நடை-பாதை ஓரமாக அடுத்தடுத்து தலைவர்கள் பலரின் அழகிய சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் நிகரில்லா சின்னங்கள் இச்சிலைகள். ஆறு கி.மீ. நீளம் கொண்ட மெரினா கடற்கரையின் மேற்குப் பக்கத்தில் சென்னைப் பல்கலைக்கழகம், மாநிலக் கல்லூரி, விவேகானந்தர் நினைவு இல்லம் ஆகியவை உள்ளன. நூற்றாண்டுகளை கடந்து நிற்கும் இங்குள்ள கட்டிடங்கள் செழுமையான கட்டிடக் கலைக்கு சான்றாக உள்ளவை. விவேகானந்தர் நினைவு இல்லத்தில் இந்திய கலாசார கண்காட்சி அமைந்துள்ளது. மெரினா கடற்கரையின் வடக்குப் பகுதியில் பேரறிஞர் அண்ணா, எம்.ஜி.ர். ஆகியோர் நினைவிடங்கள் உள்ளன.



**வழிப்போக்கன்**

மெரினாவை ஒட்டிச் செல்லும் சாலையில் நேராக வடக்கு நோக்கிச் சென்றால், சிறிது தூரத்தில் புனித ஜார்ஜ் கோட்டை வரும். 1653இல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியரால் கட்டப்பட்டது இக்கோட்டை. 18ஆம் நூற்றாண்டிலேயே இன்றைய வளர்ச்சியைப் பெற்றது. கோட்டையைச் சுற்றி மிக உயரமான மதில் சுவர்களும், அதனை ஒட்டி வெளிப்புறத்தில் அகழி காணப்படுகிறது. கோட்டையின் முன்பு மிகவும் உயரமான கொடிக் கம்பம் உள்ளது. கடற்கரையை பார்த்து இருக்கும் சாந்தோம் வாசல் (தெற்கு வாயில்), செயின்ட் ஜார்ஜ் வாசல் (வடமேற்கு வாசல்) மற்றும் வேறு முக்கிய வாசல்களும் இக்கோட்டைக்கு உண்டு. ஆங்கில அரசின் ஆளுநராகப் பின்னாளில் உயர்ந்த ராபர்ட் கிளைவ், ஒரு காலத்தில் கிழக்கு இந்தியக் கம்பெனியில் சாதாரண எழுத்தாளராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கியது இங்கேதான். இக்கோட்டைக்கு உள்ளேயே பழைய பாசறையும், அந்நாளைய அதிகாரிகளின் இல்லங்களும் உள்ளன. அவற்றில் இரண்டு குடியிருப்புகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. ஒன்று, ராபர்ட் கிளைவ் வாழ்ந்தது. மற்றொன்று, 1798இல் தளபதியாக இருந்த வெல்லெஸ்லி பிரபு குடியேறியது.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை, தற்போது தமிழக அரசின் தலைமைச் செயலகமாகச் செயல்படுகிறது. இங்கு தென் பிராந்திய ராணுவ அலுவலகங்களும் அமைந்துள்ளன. தவிர, கோட்டைக்குள் செயின்ட் மேரி தேவாலயம், தமிழகச் சட்டமன்றம், கோட்டை அருங்காட்சியகம், இந்தியத் தொல்பொருள் துறையின் சென்னைக் கிளை ஆகியவையும் உள்ளன.

கோட்டைக்குள் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்களில் ஒன்று, கோட்டை சரித்திர பொருட் களஞ்சியம். இது 1948இல் கோட்டையின் வடபகுதியில் கட்டப்பட்டது. இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் நடவடிக்கைகளைப் பற்றிய வரலாற்றை எடுத்துரைக்கும் தடயங்கள் இங்கே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் காலத்துப் பொருட்கள், கையெழுத்துப் பிரதிகள், படைக் கலன்கள், உடை வகைகள், நாணயங்கள்... போன்றவை காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பான தமிழக வரலாற்றை அறிய உதவும்.

மெரினாவுக்கு அடுத்ததாக சென்னையின் அழகு தேங்கிக் கிடக்கும் இடங்கள் என்று, சென்னையில் ஆங்காங்கே ஆருக்கும் பழங்கால வரலாற்று சிறப்புமிக்க கட்டிடங்களைச் சொல்லலாம். உயர்நீதி மன்றக் கட்டிடம், ராஜாஜி மாளிகை, அரசு அருங்காட்சியகம், கன்னிமாரா பொது நூலகக் கட்டிடம், ரிப்பன் கட்டிடம் ஆகியவை மிக முக்கியமானவை.

உயர்நீதிமன்றக் கட்டிடம், "வில்லியம் டென்னிசன்" ஆட்சிக் காலத்தில் சென்னையில் கட்டப்பட்டது. 882ஆம் ஆண்டு அன்றைய வெள்ளையரால் திறந்து வைக்கப்பட்டது. அப்போது "சி ஆர்தர் காலின்ஸ்" தலைமை நீதிபதியாக இருந்தார். பெருஞ் செங்கற்களால் கட்டப்பட்டு, சிவப்பு வண்ணம் தீட்டப்பட்டு காட்சி அளிக்கும் இக்கட்டிடத்தில் பலவகையான சிறு சிறு கோபுரங்களைக் காணமுடிகிறது. இது மொகலாயக் கட்டிடப் பாணியைப் பின்பற்றிக் கட்டப்பட்டது ஆகும். இச்சிறு கோபுரங்களில் உயரமான ஒன்றின்மீது கடற்கரை விளக்கம் பொருத்தப்பட்டுள்ளது. நீதிமன்றப் பூங்காவின் வடக்கில் பழைய விளக்கு அமைந்துள்ளது. புது விளக்கிற்குக் கீழே உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆங்கிலேயர் காலத்தில் புகழ் பெற்று விளங்கிய, "திருவாரூர் முத்துச்சாமி அய்யரின்" உருவம் சலவைக் கல்லில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. தவிர மகனை தேர்க்காலில் கொன்று, பசுவிற்கு நீதி வழங்கிய மனுநீதி சோழனின் சிலையும் உள்ளது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# நிரந்தரமான ஆயுள்காப்புறுதியில் ஒரு சேமிப்பு முதலீட்டுத் திட்டம் - (Universal Life Insurance Plan)

உயிர் இழப்பு நடந்தால் மிக பெரிய நட்ட ஈட்டு தொகை (Death Coverage) & உயிர் இழப்பு நட்ட ஈட்டு தொகையுடன் சேர்ந்த வரி இல்லாத சேமிப்பு முதலீட்டு திட்டம் (Investment Saving Plan)

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் பெரும் பான்மையானோர் விரும்பி கைச்சாத்திடும் ஒப்பந்தம் ஒன்றின் சூத்திரம் (Formula) இதுவாகும். இதனை ஆங்கிலத்தில் ஒரு சமன்பாட்டு வடிவத்தில் குறிப்பிடலாம்.
Death Coverage + Investment Funds = Universal Life insurance Coverage

மேற்குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணங்களுடன் அமைந்த ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்கள் சகல நிறுவனங்களினாலும் கனடாவில் சந்தைப்படுத்தப்படுகின்றது.

இக்குறிப்பிடப்பட்ட முதலீட்டு திட்டத்துடன் சேர்ந்த ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் தமது உயிர் இழப்பின் பின்பு தமது குடும்பத்தவர்களுக்கு எவ்வளவு தொகை நட்டஈடாக போய் சேர்தல் வேண்டும் என்பது தமது குடும்பத்தின் தேவை, வருமானங்களின் அடிப்படையாக வைத்து ஒப்பந்தத்தில் சேர்ந்து கொள்ள போகின்றவர் தீர்மானிக்கலாம்.

(அது இலட்சங்களாகவோ அல்லது மில்லியன்களாகவோ விரும்பிபடி தெரிவு செய்யலாம்) இங்கு இவ் உயிர் இழப்பு நட்ட ஈட்டு தொகையினை அடிப்படையாக வைத்து இந்த இழப்பு என்ற ஒரு ஆபத்தினை நட்டஈடு வழங்கலை ஆயுள் காப்புறுதி நிறுவனம் ஒன்று பொறுப்பு எடுப்பதால், இக்காப்புறுதிக்கான ஒரு செலவு தொகையினை (Insurance Cost) ஒரு அடிப்படை செலவாக நிறுவனம் அறவிடுவதால் ஒப்பந்தத்துக்கு உரியவர் இத் தொகையினை மாதா மாதம் உயிர் இழப்பு நடக்கும் வரை நிறுவனத்துக்கு தொடர்ந்து செலுத்திய வண்ணமேயிருக்க வேண்டும்.

இக் 'காப்புறுதி செலவு' என்பதனை பல்வேறு வகையான கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இவற்றுள்
1. நிரந்தரமான செலவு தொகை (Level Cost)
2. அதிகரிக்கும் செலவு தொகை (Increasing Cost)
3. குறிப்பிடப்பட்ட சில வருடங்களுக்கு மட்டும் பணம் செலுத்தும் செலவு தொகை (Level cost payable for certain years)

என மூன்று வகைகளில் இருப்பதால் இதில் விரும்பிய ஒரு செலவு தொகையினை இங்கு மாத கட்டு பணமாக தீர்மானிக்கலாம்.


சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


இச்செலவுத் தொகைக்கு மேலாக குறிப்பிடப்பட்ட ஒரு வரையறை வரை செலுத்தும் பணம் இக்காப்புறுதி ஒப்பந்தத்தில் உள்ள முதலீட்டு கணக்குடன் சேர்ந்து அது கால ஓட்டங்களில் வளர்ந்து வருகின்றது. ஆக குறைந்தது ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்திற்காக செலுத்த வேண்டிய தொகையில் தொடங்கி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட ஆக கூடுதலான ஒரு வரையறைக்குள் விரும்பிய ஒரு தொகையினை மாதக் கட்டுப்பணமாக தெரிவு செய்யலாம். இவ் இரு வரையறையினுள் விரும்பியபடி மாத கட்டுபணத்தினையும் மாற்றி அமைக்கலாம்.

இங்கு 'இவ் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்துடன் சேர்ந்த முதலீடு' எனப்படும் போது அதில் தங்கள் சேமிப்பு பணம் உட்பட ஏனையோரின் சேமிப்பு பணங்கள் யாவற்றினையும் ஆயுள் காப்புறுதியில் உள்ள நிதியியல் நிபுணர்கள் பல்வேறு வகையான வர்த்தகங்கள், தொழில் துறைகளில் பிரிந்து பிரிந்து பங்குளை வாங்கி விற்று அதனை வளர்ந்து கொள்வார்கள். இம்முதலீட்டு வளர்ச்சி, இவ் ஆயுள்காப்புறுதியின் ஊடாக சேமிப்பில் முதலீடு செய்த யாவரினதும் சேமிப்பும் வளர்ச்சியடைகின்றது. இச் சேமிப்பு பணத்தினை ஒப்பந்தத்துக்குரியவர் விரும்பிய நேரத்தில் திரும்ப பெற்று கொள்ளலாம். முதலீட்டு கணக்கில் உள்ள விவரங்கள், அறிக்கைகள், வளர்ச்சிகள் பற்றிய விவரங்களை நிறுவன வாடிக்கையாளர்களுக்கு வருடம் தோறும் அனுப்பி வைப்பதுடன் நேரடியாக தொடர்பு கொண்டும் தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

கால ஓட்டங்களில் திரண்டு வரும் இம்முதலீட்டு கணக்குகளில் இருந்து கிடைக்கும் பங்கு இலாபம் (Dividends) தொடர்ச்சியாக ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் செலுத்த வேண்டிய அடிப்படை காப்புறுதி செலவுக்கு (Insurance Cost) போதுமானதாக இருந்தால் நிறுவனத்திடம் இருந்து விண்ணப்பப்படிவம் (Premium offset application form) எடுத்து மனு செய்து மாதாமாதம் செலுத்தும் கட்டுப்பணத்தை நிறுத்திக்கொள்ளலாம். இம் முதலீட்டில் இருந்து வரும் பங்கு இலாபம் காப்புறுதி செலவினை கொடுத்து தீர்க்கும் நிலையில் மாதா மாதம் செலுத்தும் பணத்தினை நிறுத்தி கொள்ளும் ஒரு குறிப்பிடப்பட்ட கால வரையறையினை இவ் ஒப்பந்தத்தின் மூலம் தீர்மானிக்கலாம்.

இம்முதலீட்டு திட்டத்துடன் சேர்ந்த ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தினை ஈடாக வைத்து நிறுவனத்தில் இருந்து விரும்பினால் கடன் வசதிகளையும் பெற்று கொள்ளலாம்.

இம்முதலீட்டு திட்டத்துடன் சேர்ந்த ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் விரும்பினால் பின்வரும் அம்சங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

1. கடுமையான நோய்கள் ஏதாவது வந்தால் (Critical illness insurance) நட்டஈடு பெற்று கொள்ளும் திட்டம்.
2. தற்காலிக ஆயுள் காப்புறுதி திட்டம். (Term Insurance)
3. உடல்நிலை பாதித்து வேலை செய்ய முடியாவிட்டால் மாத கட்டு பணத்தினை செலுத்த தேவையில்லாத திட்டம் (Waiver of premium)
4. விபத்துகளினால் ஏற்படும் உயிர் இழப்பு நட்டஈடு (Accident death insurance coverage)
5. குடும்பத்தவர்கள் யாவரினையும் சேர்ந்த திட்டம் (Multiple insurance plan)
6. கணவன், மனைவி கூட்டான ஆயுள் காப்புறுதி திட்டம் (Spouse joint first to die plan)
7. உடல் இயலாமைக்கான நட்டஈடு (Disability benefit)



என ஏராளமான அம்சங்களை மேலதிக விலை கொடுத்து இவ்ஒப்பந்தத்துடன் சேர்ந்து கொள்ளலாம்.

# இயல் விருது விழா 2007ஆம் ஆண்டு

வருடாவருடம் தமிழ் இலக்கிய தோட்டத்தால் நடத்தப்படும் இயல்விருது இவ்வருடம் யூன் மாதம் 3ஆம் திகதி ரொறொன்ரோவில் உள்ள வில்லியம் டு அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் இலக்கியத்தோட்டம் ரொறொன்ரோவில் பல ஆண்டுகளாக இயங்கி வருவதனை விளம்பர வாசகர்கள் அறிந்தது.



இதன் பணியாக வருடாவருடம் வாழ்நாளில் இயல், இசை, நாடகத்தில் தமிழிற்கு செய்த சாதனைக்காக பாராட்டுக்கேடயமும் $1500 பெறுமதியான பணப்பரிசும் வழங்குவது இயல்பாகும். இந்தச் சாதனையாளரை ஒரு நடுவர் குழுவே தெரிவு செய்கின்றது. இவர்கள் உலகின் பல பாகங்களிலும் வாழ்கிறார்கள். இந்தியா, இலங்கை, மலேசியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளை குறிப்பிடலாம். கடந்த ஐந்து வருடங்களாக வாழ்நாள் சாதனைக்காக பரிசு வழங்கி வந்த இந்த குழு இவ்வருடம் மேலும் நாலு புதிய பரிசுகளையும் வழங்கி கௌரவித்தது. அவையாவன புனைவு இலக்கியம், அபுனைவு இலக்கியம், கவிதை, தமிழ் தகவல் தொழில்நுட்பம் ஆகும்.

இவ்வருடம் திரு. ஏ.சீ. தாசீசியசுக்கு வாழ்நாள் சாதனைக்கான விருது வழங்கப்பட்டது. இவர் சிறந்த நடிகருக்கான தேசிய விருதையும், சிறந்த நாடகத்துக்கான ஜனாதிபதி விருதையும் இலங்கையில் பெற்றவர். இலண்டனில் பிபிசிக்காக பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்த காலத்தில் ஐந்து மாதப் பயணத்திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு சென்று அங்கேபல பகுதிகளிலும் பயிற்சிப் பட்டறை நடத்தி, நாடக உலகில் விழிப்புணர்வையும், புதிய பாதையையும் ஏற்படுத்தியவர். சுவிற்சலாந்தில் இருந்து கிடைத்த அழைப்பின் பேரில் அங்கே சென்று 'சலாமி' என்ற நாடகத்தையும் தமிழ், ஜேர்மன், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் உருவாக்கி, மேடை ஏற்றி சரித்திரம் படைத்தவர். ஜெனீவாவில் அமைந்திருக்கும் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் நீதியான சமாதானத்துக்காகவும், மக்களாட்சிக்காகவும் குரல்கொடுக்கும் திட்டமிடல் குழுவில் பணியாற்றிக்கொண்டு இன்று கலைத்துறையில் தொடர்ந்து சேவை செய்கிறார். தமிழ் நாடகக் கலையை உலக மட்டத்துக்கு உயர்த்தி, நாடகத்துக்கும், தமிழுக்கும் புகழ் சேர்த்திருக்கும் திரு. ஏ.சீ. தாசீசியஸ் அவர்களுக்கு இந்த விருது கிடைப்பது பொருத்தமானதே.

இதுதவிர தமிழ் இலக்கியத்தோட்டத்தின் வருடாந்த விருது விழாவில் வேறு பரிசுகளும் வழங்கப்பட்டன.

ரேவதி - அபுனைவு இலக்கியம் - 2006 'உணர்வும் உருவமும்' நூலுக்கும், ஜோ டி குருஸ் - புனைவு இலக்கியம் - 2006 'ஆழி சூழ் உலகு' நாவலுக்கும், உருத்திரமூர்த்தி சேரன் - கவிதை - 2006 - 'மீண்டும் கடலுக்கு' நூலுக்கும் வழங்கப்பட்டது.



முனைவர் கி. ஸ்ரீனிவாஸன் - தமிழ் தகவல் தொழில்நுட்பம் - 2006 இந்த வருடத்திலிருந்து புதிதாக மேற்சொன்ன தமிழ் தகவல் தொழில் நுட்பம் சாதனைக்கான பரிசு திரு. சுந்தர ராமசாமி நினைவாக வழங்கப்பட்டது. திரு. கி. ஸ்ரீனிவாஸன் பெங்களூர் இந்திய அறிவியல் கழகத்தில் பொறியில் படித்து பின்னர் கனடாவின் வாட்டலூ பல்கலைக்கழகத்தில் மின்னணுவியல் ஆராய்ச்சிக்காக முனைவர் பட்டம் பெற்றவர். 1965 ஆம் ஆண்டு தொடக்கம் கனடாவில் வசித்து வருகிறார். கி. ஸ்ரீனிவாஸன் இந்திய மொழிகளிலேயே முதலாவது தமிழ் எழுத்துருவை சிபிஎம் 80 இயக்கு தளத்திற்காக வடிவமைத்தார். தொடர்ந்து மைக்ரோஸொஃப்ட் டாஸ் இயக்குதளத்திற்காக, மீண்டும் இந்திய மொழிகளில் முதலாவதான ட்ருடைப் எழுத்துருவையும், ரோமன் விசைப்பலகை வழியே தமிழை உள்ளீடு செய்யும் ஆதமி என்ற நிரலியையும் உருவாக்கினார். அவர் வடிவமைத்த முன்னோடி ஆங்கிலவழி தமிழ் உள்ளீட்டு முறை இன்றளவும் இணையத் தகவல் பரிமாற்றங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. ஸ்ரீனிவாஸன் நவீன கணினிகளுக்கான தமிழ் உள்ளீட்டு நிரலிகளைத் தொடர்ந்து உருவாக்கிவருகிறார். பரந்துபட்ட சமூகப் பயன்பாட்டுக்கென அவருடைய படைப்புகளைத் தொடர்ந்து இலவசமாகவே அளித்து வருகிறார். தமிழ் எழுத்துத் தரக்குறியீடு, தமிழ் உள்ளீட்டு வழிமுறைகள் குறித்த அவருடைய ஆய்வுக்கட்டுரைகளைத் தமிழ் இணைய மாநாடுகள் வழியே பங்களித்திருக்கிறார். "நவீன தொழில்நுட்பம் சிறுபான்மை மொழிகளையும் கலாசாரங்களையும் பாதுகாக்க உதவுகிறது. அவற்றை பதிவு செய்ய, பரவலாகப் பகிர்ந்துகொள்ள, சேமிக்க அனைவருக்கும் சக்தியளிக்கிறது" என்று கி. ஸ்ரீனிவாஸன் நம்புகிறார். எதிர்வரும் வருடங்களில் மேலும் பல முயற்சிகளில் கனடா தமிழ் இலக்கியத்தோட்டம் இறங்க இருக்கிறது என்று அறிகிறோம்.



# தடையாகும் தலை(மை)கள்

## ஓடும் நீர் உறைவதில்லை 38

நாம் எல்லோரும் தலைமைத்துவத் தகைமையுடையவர்கள். நாளாந்த வாழ்வில் பல்வேறு விடயங்களில் பல்வேறு தேவைகளைப் பொறுத்து இந்தத் தகைமை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வெளிப்படுத்தப் படுகிறது. பிறந்ததிலிருந்து இறப்புவரை நாம் தினமும் பல்வேறு விடயங்களை முன்னெடுத்துச் செல்கிறோம். அவ்வாறு முன்னெடுத்துச் செல்லபடும் விடயங்களின் விளைவுகள் எமது தலைமைத்துவத் திறனை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படு கின்றன. இதனால் தான் தலைமைத்துவம் என்பது எல்லோரிடமும் உண்டு என்கிறோம். ஆனால் அதன் செயற்பாட்டளவு தான் ஆளுக்காள் வேறுபடுகின்றது.

தனிநபர் ஒருவர் தன்னை வழிப்படுத்துவதற்கு கூட தலைமைத்துவத் தகைமை தேவைப்படுகின்றது. எமது சிந்தனை-களை நெறிப்படுத்துவதும் இந்தத் தகைமைதான். எனவே தலைமைத்துவம் என்பது தனியொருவருக்கும் அவசியமானது. கூட்டாக வாழ்வோருக்கும் அவசியமானது. இதனால்தான் ஒவ்வொரு மனிதனையும் தலைவன் எனக்கருதுகிறோம். ஒவ்வொரு மனிதனும் தலைவனாக இருப்பினும் எல்லோரும் சமமான தலைமைத்துவத் தகைமைகளைப் பெற்றிருப்பதில்லை. இவ்வாறு வெவ்வேறுபட்ட அளவிலான தகைமையை ஒவ்வொருவரும் பெற்றிருப்பதற்கு பல காரணிகள் அடிப்படைகளாகின்றன. ஒருவரது பெற்றோரது மனோபாவம், வாழும் சூழல், கல்வியறிவின் அளவு, அனுபவ அறிவின் அளவு, மனஉறுதி, தன்னம்பிக்கை அவரால் பின்பற்றப்படும் வாழ்வியல் சார்ந்த விடயங்கள், அவரது வழிகாட்டியின் தகவல்கள், தகைமைகள் போன்ற பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இங்கு ஒரு முக்கியமான விடயத்தை நாம் கவனித்தல் வேண்டும். ஒருவரது தலைமைத்துவத் திறனை வளர்ப்பதற்குப் புறக்காரணிகள் எவ்வளவு தூரம் உதவி செய்தாலும் அவரது அககாரணிகளே தகைமையின் அளவைத் தீர்மானிக்கின்றன. இதனால்தான் ஒரே அளவிலான உதவிகள், வழிகாட்டல்களைப் பெறும் பலரில் மிகச் சிலரே அதிகளவு திறன் உள்ளவர்களாக உருவாகுகிறார்கள்.

தலைமைத்துவத் திறனானது ஒருவரது மனோபாவத்தினால் தீர்மானிக்கப்படுவதால் தான் ஒவ்வொருவரும் அந்த மனோபாவத்தைத் தரமான முறையில் நெறிப்படுத்துவதன் மூலம் சிறந்த தலைமையாக உருவாக முடியும். அனுபவத்தில் - கல்வியறிவில் சராசரியானவர்கள், பொருளாதார அடிப்படையில் சராசரியானவர்கள், மற்றவர்களது வழிகாட்டலில் மிகக் குறைந்த வாய்ப்புக்களைப்பெற்றவர்கள் பலர் சிறந்த தலைவர்களாகவும், முன்னோடிகளாகவும் வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள். எனவே சிறந்த மனோபாவங்களை வளர்க்கும் ஒவ்வொருவரும் சிறந்த தலைவர்களாகிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஒருவர் தலைவனா அல்லது தலைவர் ஒருவரைப் பின்பற்றுபவரா என்பது அவரது மனோபாவத்தினாலேயே தீர்மானிக்கப்படு கின்றது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்கித் தலைவர்களாகும் வாய்ப்பு வரையறையின்றி வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த உண்மையை நாம் வரலாற்றை நோக்குவதன் மூலம் அறிந்து கொள்ளலாம். ஆளுமையின் திறன் தலைமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படுவதை யும் நாம் அவதானிக்கலாம்.




ஒரு சிறந்த தலைமை என்பது சில முக்கிய பண்புகளைக் கொண்டிருக்கும். நேர்த்தியான பார்வை, உறுதியான உள்ளம், மற்றவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், பொறுமை, முற்போக்குச் சிந்தனை என்பவற்றுடன் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக (Role Model) இயங்குவதும் மிகப் பிரதானமானதாகும். ஏனெனில் ஒருவர் சிறந்த பண்புகளையும் மனோபாவங்களையும் கொண்டிருப்பினும் அவற்றை ஒரு முன்மாதிரியாகப் பயன்படுத்துவதில் தவறுவாராயின் அவரது தலைமைத்துவ தகமை புறக்கணிக்கப்படுகின்றது. ஒரு சிறந்த தலைமையானது அதன் செயற்பாடுகளால் தீர்மானிக்கப்படுகின்றதேயன்றி வார்த்தை களாலோ அல்லது கட்டளைகளாலோ தீர்மானிக்கப்படுவதில்லை. இதுவே தலைமையின் ஆணிவேராகவும் அமைகின்றது.

வாழ்வியலில் நாம் ஒவ்வொருவரும் விரும்பியோ விரும்பாமலோ தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்கு உட்படுத்தப்படுகிறோம். இங்கே நான் குறிப்பிடும் தலைமைத்துவம் தொழில் சார்ந்ததல்ல. ஏனெனில் தொழில் சார்ந்த தலைமைத்துவத்திற்கு அதற்கான தகைமைகள் பற்றிய ஆய்வும் அதற்கான மதிப்பெண்களும் அவசியமானவை. இங்கே நான் குறிப்பிடும் தலைமைத்துவம் வாழ்வியல் சார்ந்தது. தகைமை பற்றிய பரீட்சையற்றது. அதனால் மதிப்பெண்களை அடிப்படையாக வைத்து வழங்கப்படுவதுமல்ல. இந்தத்தலைமை ஒருவரது இயல்பு நிலையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுவதுமல்ல. மாறாக அவரால் தாமாகவே ஏற்றுக்கொள்ளப்படுவதும் தவிர்க்கமுடியாததுமாக அமைகின்றது. இதனால் தான் இந்தத் தலைமை ஆளுமை என்ற அர்த்தம் கொடுப்பதாயும் ஒரு ஆண் மகனால் குடும்பம் என்ற பந்தத்துக்குள் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயும் தவிர்க்க முடியாததாயும் அமைகின்றது.

குடும்பம் என்ற பந்தத்துக்குள், அமைப்புக்குள் ஒரு ஆணும் பெண்ணும் உட்படும் போது ஆண் குடும்பத்தலைவன் என்றும் பெண் குடும்பத்தலைவி என்றும் வகைப்படுத்தப்படினும் குடும்பத்தின் தலைமை என்பது ஆணுக்கே உரித்தாகின்றது என்பது மட்டுமல்ல அதற்கான பொறுப்பும் அவரிடமே ஒப்படைக்கப்படுகின்றது. இதனால்தான் ஒரு ஆணால் தட்டிக் கழிக்கமுடியாத தலைமைத்துவமாக இந்தக் குடும்பத்தலைமை அமைகின்றது.

ஒரு குடும்பத்தின் தலைமை ஒரு ஆணுக்குரிய வாழ்வியல் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பிலிருந்து வெளியேறமுடியாது. அதுமட்டுமல்ல இன்னொருவரால் பிரதியீடு செய்யப்படக்கூடியதுமல்ல. எனவே குடும்பம் என்ற அமைப்புக்குள் உட்படும் ஒரு ஆண்மகன் இந்த இருகாரணிகளையும் தெளிவாக உணர்ந்து கொள்வாராயின் முற்றுமுழுதான பொறுப்பானதும் பிரதியீடு செய்ய முடியாததுமான தலைமைத்துவத்திற்கு தன்னைத் தயார் செய்வது தவிர்க்கமுடியாதது என்பதை அறிவார். துரதிஷ்டவசமாக மிகக்குறுகிய எண்ணிக்கையுடையவர்களே இந்த உணர்வுடன் குடும்ப பந்தத்தை ஆரம்பிக்கிறார்கள். மிகுதியில் சிறுபகுதியினர் குடும்பத்தை ஆரம்பித்து குறுகிய காலப்பகுதிக்குள் இந்த உணர்வினை உருவாக்கிக் கொண்டு சிறந்த தலைமைத்துவத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிடுகிறார்கள்.

நடைமுறையில் அதி பெரும்பான்மையான ஆண்கள் திருமணமாகிப் பல ஆண்டுகள் குடும்பபந்தத்துக்குள் இருந்தும் குழந்தைகளுக்குத் தந்தையாகியும் குடும்பத் தலைவன் என்ற அந்தஸ்தை சொல்லளவில் மட்டும் வைத்துக்கொண்டு தன்னையும் தாழ்வாக்கித் தனது குடும்பத்தையும் தாழ்வான நிலைக்கு இட்டுச் செல்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரையில் குடும்பத்தலைவன் என்பது ஒரு ஆண் என்ற அடிப்படையில் குடும்பத்தில் உள்ள மற்றவர்களை அடிமைப்படுத்தும் மனப்பாங்குதான் எனக்கருதுகிறார்கள். ஒரு தலைமைக்கு தேவையான அடிப்படைப் பண்புகளைக் கூட அறிந்து கொள்ளவோ அல்லது அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்கவோ விரும்பமாட்டார் கள். ஒருதலைப்பட்சமான தமது கருத்துக்களை மற்றவர்கள் மீது குறிப்பாக மனைவியின்மீதும் குழந்தைகள்மீதும் திணிப்பதில் தமது வாழ்நாளைப் பயன்படுத்தி தானும் மகிழ்ச்சியுடன் வாழ முடியாததுடன் மற்றவர்களையும் உடல், உளவியல் ரீதியான பாதிப்புக்களுக்கு உட்படுத்துகிறார்கள். இவர்கள்தான் தடையாகும் தலை(மை)களாக வகைப்படுத்தப்படுகிறார்கள்.

ஒரு குடும்பத்தின் தலைமை என்பது மிகவும் பொறுப்பு வாய்ந்ததும் தவிர்க்க முடியாததுமாகும். ஒரு தொழில் நிறுவனத்தின் தலைமை, அரசியல் தலைமை என்பன காலத்துக்கு காலம் மாறுவதும், இன்னொருவரால் பிரதியீடு செய்யக்கூடியது மாகும். ஆனால் குடும்பத்தின் தலைமை தனித்துவமானது. அதுமாறுவதும் இல்லை. பிரதியீடு செய்யப்படுவதுமில்லை. எனவே இத்தகைய தனித்துவம் வாய்ந்த தலைமையானது ஒரு ஆண் மகனுக்கு கிடைக்கும் வரப்பிரசாதம் என்பதை அறிந்து கொள்வது அவசியம்.

ஒரு குடும்பத்தலைவனின் சிறப்பும், சிறப்பின்மையும் அந்தக் குடும்பத்தின் அங்கத்தவர்களது சிறப்பினையும் சிறப்பின்மையையும் உருவாக்குகின்றது. சிறந்த குடும்பத்தலைவன் சிறந்த குழந்தைகளை உருவாக்கும் சிற்பி. தரமான முறையில் நெறிப்படுத்திய குழந்தைகளை எதிர்காலத்திற்கு அனுப்பி எதிர்காலத்தைப் பொன்மயமாக்கும் புண்ணியவான். இத்தகைய சிறப்பு வாய்ந்த தலைமைத்துவம் தான் குழந்தைகளின் தந்தையும் குடும்பத்தின் தலைவனுமாகியவருக்கு வாழ்வியலில் கிடைத்திருக்கும் அரும்பெரும் வாய்ப்பு என்பது தான் வாழ்ந்து வழிகாட்டியவர்களது வரலாற்றுக்குறிப்பு.

**ஆம் வாசகர்களே!**

ஒரு குடும்பத்தின் தலைவன் என்பவர் அக்குடும்பத்தின் அங்கத்தவர்களது எதிர்காலத்தைச் சிறப்பாக அமைக்க வேண்டிய தலைமைத்துவ பொறுப்புடையவராவார். உண்மை, நேர்மை, உயர்வான எண்ணங்கள், சிறந்த சிந்தனைகள், நேர்த்தியான மனோபாவம், உயர்ந்த தன்னம்பிக்கை, உறுதியான உழைப்பு, மற்றவர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், தெளிந்த புரிந்துணர்வு, பொறுமை, மன்னிக்கும் மனப்பாங்கு என்பவற்றை நாளாந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் குடும்பத்தலைவன் அதே விடயங்களைத் தமது குழந்தைகளூடாக வரையறையற்ற எதிர்காலத்துக்கு எடுத்துச் செல்வதற்கான வழியையும் உருவாக்குகிறார்கள். இத்தகைய சிறந்த பண்புகளைக் குழந்தைகளிடம் விதைக்கும் ஒருவர் அக்குடும்பத்தின் ஒரு தலையாக இல்லாமல் குடும்பத்தின் தலைமையாக அமைகிறார். எனவே சிறந்த மனோபாவங்களின் சுரங்கமாக எம்மை உருவாக்கி அவற்றை முன்மாதிரியாக வாழ்க்கையில் பயன்படுத்தி குடும்பத்தின் ஒருதலை என்ற நிலையைத் தலைமை என்ற நிலைக்கு மாற்றி சீரும் சிறப்பும் வாய்ந்த எதிர்காலச் சந்ததியை உருவாக்குவோம். அப்போதுதான் அவர்களால் மதிக்கப்படும் தந்தையர் தினம் நமக்குரியதாகும்.



**KG Master**
**416.725.5112**




**KG Master**
**(416) 725-5112**
**(416) 763-0332**

**Helping You and Your Family Move Forward**

| | |
|---|---|
| **Character Education** *for your children* | *Week-end Classes for 9 to 17 years old* |
| **Building Self-Esteem** *of your children* | Guidance and direction for Parents who have 2 to 8 years old children |
| **Building a Happy Family** | *Practical ideas and directions for all members of your family* |

**Email: kgm@kgmaster.com** **Web: www.kgmaster.com**

# தென்னகத்தின் நுழைவாயில்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

ராஜாஜி மாளிகை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் பூங்காவின் மத்தியில் உள்ளது. இது திப்புசுல்தான் மீது கொண்ட வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு, பிரமாண்டமாக ராபர்ட் கிளைவால் கட்டப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் வான சாஸ்திர பொறியியல் வல்லுநர் கோல்டுஹாம், இதனை 1802ஆம் ஆண்டு கிரேக்கக் கோயிலின் வடிவில் கட்டினார். தனுடைய முகப்பு வாயில் உயரமான அடுக்கடுக்கான படிகளைக் கொண்டது. முதலில் ஆளுநரின் விருந்தினர் மாளிகையாக இருந்த இம்மாளிகை, இப்போது “ராஜாஜி ஹால்” எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, முக்கிய பொது நிகழ்ச்சிகளுக்கும், திரைப்படப் பிடிப்பிற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு அருங்காட்சியகம், இந்தியாவில் உள்ள தொன்மையான அருங்காட்சியகங்களுள் இரண்டாவது இடத்தில் இருப்பது. 1851இல் நிறுவப்பட்ட இந்த அருங்காட்சியகம் சென்னை எழும்பூரில் உள்ளது. தொல்பொருளியல் கூடம், படிமக் கலைக்கூடம், மானிடவியல், உலோக நாணயவியல் பகுதி, தாவரவியல் பிரிவு, பூமி அமைப்பியல் பிரிவு, வேதியியல் கூடம் எனப் பல முக்கியமான பிரிவுகள் உள்ளன. தேசிய மரபுச் செல்வங்களைக் காக்கும் கலைக் களஞ்சியமாக இவ்வருங்காட்சியகம் அமைந்துள்ளதோடு, தொல்பொருட்களையும் பேணிக் காக்கிறது. அருங்காட்சியகத்தை ஒட்டியே உள்ளது கன்னிமாரா பொது நூலகம். நூற்றாண்டு கண்ட நூலகம் இது. ஐ.நா.சபை, யுனெஸ்கோ, ஆசிய வங்கி ஆகியவற்றின் தகவல் மையமாகவும் உள்ளது இந்த நூலகம். 1890ஆம் ஆண்டு இதற்கு அடிக்கல் நாட்டியவர் சென்னையின் அன்றைய ஆளுநராக இருந்த கன்னிமாரா பிரபு. ஆகவே, அவர் பெயரிலேயே இது அழைக்கப்படுகிறது. இங்கு 16ஆம் நூற்றாண்டு நூல்கள் முதல், இன்றைக்கு வெளிவந்த நூல்கள் வரை சேமிக்கப்படுகின்றன. சுமார் 5 லட்சத்து 7 ஆயிரம் நுல்கள் இங்கு உள்ளன.

ரிப்பன் கட்டிடம், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கும் மேற்கே, ஈ.வே.ரா. நெடுஞ்சாலையில் உள்ளது. இக்கட்டிடம் கட்டி 85 ஆண்டுகள் ஆகியும் வெள்ளை மாளிகை போல் இன்றும் மிகப் பொலிவுடனும், அழகுடனும் திகழ்கிறது. இக்கட்டிடம் அப்போதைய வைஸ்ராயாக இருந்த ரிப்பன் பிரபுவின் நினைவாக பெயரிடப்பட்டது. இந்திய மொகலாய கட்டிடக்கலை நுணுக்கங்கள் மற்றும் அழகுக்கும் இன்றும் சாட்சியாக நிற்கும் கட்டிடம் இது.



சென்னையை நோக்கி உலகக் கலைஞர்களை ஈர்க்கும் முக்கியமான இடங்களில் ஒன்று கலாசேத்திரம். தென் சென்னையில் திருவான்மியூருக்கு அருகில் கிராமியச் சூழலில் அமைந்துள்ளது கலாசேத்திரம். சிறந்த நடனக் கலைஞராகிய “ருக்மணி அருண்டேல்” என்பவரால் தொடங்கப் பெற்றது. இசை, நாடகம், ஓவியம் ஆகியவை இங்கு கற்பிக்கப்பட்டு வருகின்றன.

பன்னாட்டு மாணவ, மாணவிகளும் இங்கு கலைப் பயிற்சி பெறுகின்றனர். இசை, நடனக் கலைஞர்களுக்கு மறுமலர்ச்சி அளிக்கும் மாபெரும் பணியைக் கடந்த 43 ஆண்டுகளாகச் செய்துவரும் உலகப் புகழ் பெற்ற கலை நிறுவனம் கலாசேத்ரா.


ஒளிமயமான எதிர்காலம்
என் உள்ளத்தில் தெரிகிறது

**Future Investment**
Senior Home
1.5 Acre
70 units acre
Whitby

**BANQUET HALL**
5 Split party hall
27,000 sqft.
975 seats-at HWY 400 80 parking
3 split 500/300/200

ஏக்கர் நிலம் வருமானத்துடன்
Beach, Cottage

வீடும் வியாபாரமும் *Business Zoning*

Metal Recycling
**Auto Body Shop**
Yunk Yard 2 Acres land with
**House and Basesemt**
**PAINT AUTO BODY SHOP**
**2300 SQFT. WITH RUNNING BUSINESS- KIPLING & STEELES**

$175,000

**Auto Body shop**
House with Basement
Yunk Yard
**10 acres**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு
வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

MCCOWAN & ELLESMERE - Big lot House with bsmt apt. FOR LEASE . 5 parking




# "தமிழில் நல்ல பொழுதுபோக்குத் திரைப்படங்கள் குறைவு"

## நேர்காணல் : இயக்குனர் வெங்கட் பிரபு

